# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா.நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 25 ★ 20-10-57 சென்னை ★ விலை 16 காசு


# ★ எங்கெங்கு காணினும் எழுச்சி! ★

—(0)—

## அக்டோபர் 13இல் தமிழகத்தின் காட்சி!

—(0)—

## கடைசி வேண்டுகோள்! – கடைசி எச்சரிக்கை!

—(0)—

செப்டம்பர் 22ஆம் தேதி திருவண்ணாமலையில் எழுப்பப்பட்ட குரல், அக்டோபர் 13இல் தமிழ்நாடெங்கும் எதிரொலித்தது!

இந்தி ஏகாதிபத்தியத்தால் தென்னாட்டுக்கு வரவிருக்கும் பேராபத்தை விளக்கி, அக்டோபர் 13இல் இந்தி எதிர்ப்பு நாளைக் கொண்டாடும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன்படி பட்டிதொட்டிகளிலும் சிற்றூர் பேரூர்களிலும், இந்தி எதிர்ப்பு காட்டப்பட்டது! இந்திஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கத் தென்னகம் தயாராக இருக்கிறது என்பதை அக்டோபர் 13 எடுத்துக்காட்டியது!

நீறு பூத்த நெருப்பு, மேலே படர்ந்து கிடந்த சாம்பலை உதிர்த்து, ஒளிவிடத் தொடங்கிவிட்டது!

குகையிலே அடங்கிக்கிடந்த சிங்கம் வெளியே வந்து நோக்குகிறது, “ஊளையிட்ட நரிகளே! எங்கே, எங்கே?” என்று!

வீரன் எழுந்து நின்றான், வாள் உறை கழிந்தது, முரசு தட்டப்பட்டுவிட்டது, “களம் போகும் கணம் எப்போது?” என அவன் கேட்கிறான், மொழியால் அல்ல, உருட்டிப்பார்க்கும் விழியால்!

தென்னாட்டின் வாழ்விலே, அதன் வரலாற்றுப் பாதையிலே, டில்லி ஆதிக்கம் தடைக்கற்களைப் போட்டாலும், சூழ்ச்சிவலைகளை வீசினாலும், அவற்றைத் தகர்த்தெறியும் தடந்தோட்கள் “இதோ! இதோ!” என்று நிமிர்ந்த தோளினர்—நேர்மைமிகு நெஞ்சினர் பல்லாயிரவர் கூடி அக்டோபர் 13இல் ஆரவாரித்தனர்!

தென்னாட்டைக் காக்கவந்த தீரர்கள், இந்த வளநாட்டை வாழவைக்கவந்த வீரர்கள், பாசறையில் கூடினர், அணிவகுப்புகள் நடத்தினர், படையெடுத்துவரும் எதிரிக்கு எச்சரிக்கை விடுத்தனர்!

அக்டோபர் 13இல் தமிழகமெங்கும் எவ்வளவு உணர்ச்சியும் எழுச்சியும் பெருக்கெடுத்தோடின! ஒளிகொள் விழிகளில் உறுதியைக் காட்டிடும் எண்ணற்ற இளைஞர்கள், வீதிகள் நிறைய ஊர்வலங்கள் நடத்தினார்கள், வெட்டவெளிகளில் கூட்டங்கள் போட்டார்கள், இந்திஆதிக்கத்துக்குத் தென்னாடு அடிபணியாதுஎன்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள்! அவர்கள் நடத்திய ஊர்வலங்களில் யானைகள் முன் சென்றன, முரசுகள் ஒலிக்கப்பட்டன, சேரனும் சோழனும் பாண்டியனும் செந்தமிழ் நாட்டில் வீரம் விளைத்த முன்னவர்களும் முதலில் அழைத்துச் சென்றனர்! எவர் தடுத்தாலும், எப்படை எதிர்ப்பட்டாலும் அவற்றையெல்லாம் மீறி, “தென்னாட்டின் வரலாறு தந்த உரிமைப்பாதையில் நாங்கள் முன்னேறிச் செல்வதை எவரும் தடுத்திட முடியாது” என்று வீர நடை போட்டுச் செல்வதைப்போல, நல்ல இளைஞர்கள் அந்த ஊர்வலங்களில் அணிவகுத்துச் சென்றனர்! அவர்கள் கூட்டிய கூட்டங்களில் கழகத்தின் முன்னணி வீரர்களும் கழகத்திற்கு அப்பாற்பட்டவர்களும், நாட்டுப் பற்றுடையவர்களும் நல்லறிவாளர்களும், காவியணிந்தவர்களும் கமண்டலமேந்தியவர்களும், முற்றுந்துறந்தவர்களும் மொழிப் பற்று மிகக் கொண்டவர்களும், உழவர்களும் பாட்டாளிகளும் வருங்காலத்தில் ஊராளும் தகுதி பெற்றவர்களும் பலரும் கலந்து கொண்டனர்! அலைமோதும் சென்னைக் கடற்கரையிலிருந்து தூத்துக்குடித் துறைமுகப் பட்டணம்வரை, இந்திக்கு எதிர்ப்பு மிக வலிவான முறையில் காட்டப்பட்டது!

**இரா.செழியன்**

அக்டோபர் 13இல், படையெடுத்துவரும் இந்தி ஆதிக்கத்துக்கு எச்சரிக்கைத் தந்துள்ளோம்!

டில்லி ஆட்சிபீடத்துக்கு எச்சரிக்கைத் தரப்பட்டுள்ளது!

எதேச்சாதிகார முறைக்கு, ஏகாதிபத்திய வெறிக்கு எச்சரிக்கைத் தரப்பட்டுள்ளது!

மக்களின் விருப்பங்களைக் கவனிக்க மறுக்கும் மதோன்மத்தர்களின் ஆட்சிக்கு எச்சரிக்கைத் தரப்பட்டுள்ளது!

மற்ற மொழிகளை நசிக்கச் செய்யும் செங்கோட்டை தர்பாருக்கு எச்சரிக்கைத் தரப்பட்டுள்ளது!

தென்னாட்டை அடிமைப்படுத்த, தென்னாட்டு மொழிகளை அழித்தொழிக்கத் திட்டங்கள் வகுத்திடும் டில்லி ஆளவந்தார்களுக்கு எச்சரிக்கைத் தரப்பட்டுள்ளது!

இந்தியைத் திணிக்க அவர்கள் சூழ்ச்சிகள் செய்கிறார்கள், சுற்றிவளைத்துவருகிறார்கள், திரைமறைவில் சதிகளைப் புரிகிறார்கள்; ஆனால் நமது தீர்மானங்கள், திட்டங்கள் வெளிப்படையாக இருக்கின்றன; திட்டவட்டமாக எச்சரிக்கிறோம், “வேண்டாம் இந்த விபரீதம்!” என்று!

கடைசிவேண்டுகோளை விடுத்தோம்! கடைசி எச்சரிக்கையைத் தந்தோம்!

நமது வேண்டுகோளை டில்லி அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால், நமது எச்சரிக்கையை இந்தி ஆதிக்கக்காரர்கள் மதிக்க மறுத்தால், நாம் எதற்கும் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்!

டில்லி ஆட்சியாளர்களிடம் அதிகார பலம் இருக்கிறது, பட்டாளம் இருக்கிறது, துப்பாக்கி இருக்கிறது, அடக்குமுறைச் சட்டங்கள் இருக்கின்றன, எதையும் செய்யத் தயங்காத எதேச்சாதிகாரப் போக்கு இருக்கிறது, அடங்க மறுக்கும் மக்களைக் கொன்று குவிக்கவல்ல கல்நெஞ்சமும் ஈவு இரக்கமற்ற தன்மையும் இருக்கிறது! இவ்வளவு பலங்களையும் துணையாக வைத்து இந்தியைக் கட்டாயமாக அவர்கள் கொண்டுவரலாம்! ஆனால் வரலாற்றில் நாம் படித்தவரை, மக்களின் மனவெழுச்சியை அடக்கநினைத்த எந்த அரசும் நீண்டநாள் நிலைபெற்றதில்லை! பலம் மிகுந்த அதிகாரமிருந்தாலும், பட்டாளம் ஆயிரமிருந்தாலும் கடைசியாக மக்கள் உரிமை வெற்றி பெற்றிருக்கிறது, மதம்பிடித்த ஆட்சி வீழ்ந்திருக்கிறது!

மக்களின் சம்மதத்தைப் பெறாத ஆட்சி, மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்ட ஆட்சி, அடிப்படை இற்றுப்போன கட்டடத்தைப் போலாகும்! சிறிது அசைவுக்கும், சிறிதளவு பலமான காற்றுக்கும் அது நிற்க முடியாமல் வீழ்ந்து முன்பு இருந்த இடம் தெரியாமல், குட்டிச்சுவராய், கற்குவியல்களாய், குரங்குகள் தாவிக் குதிக்கும் இடமாய் ஆகிவிடும்!

இவைகள் வரலாறுகளின்மூலம் நாம் கண்ட மறக்க மறைக்க மறுக்க முடியாத உண்மைகள். இதனைத் திரும்பத் திரும்பக் கூறி நினைவுப்படுத்துகிறோம். எதேச்சாதிகாரப் போக்கு நாட்டுக்கு நலன் விளைப்பதாகாது என்பதையே அக்டோபர் 13 கடைசி வேண்டுகோள், கடைசி எச்சரிக்கையாக விடுத்துள்ளது. இதன் உண்மையை உணர்ந்து டில்லி ஆதிக்கம் தனது போக்கை மாற்றியமைத்துக்கொள்ளட்டும்! ○

# ஆங்கிலம் இந்தியாவின் தேசியமொழி!

—(0)—

## கே. எம். கரியப்பாவின் கருத்து!

[இந்தியாவின் பொது மொழியாக ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டுமென்பதை, முன்பு இந்திய இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் கே. எம். கரியப்பா அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார். அவருடைய ஆங்கிலக் கட்டுரையில் குறிப்பிடத்தக்க சில பகுதிகள் கீழே மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளன.]

"இந்தியா விடுதலை பெற்றதும், இந்தியாவிலுள்ள சிலர் புரிந்து கொள்ள முடியாத ஏதோ சில காரணங்களால் ஆங்கில மொழியைத் திடீரென வெறுக்கத் தொடங்கியுள்ளார்கள். ஏன் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. வெளிநாட்டார் ஆட்சி முறையை அகற்ற நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. அதற்காக, முன்னைய ஆட்சிக்காலத்தில் இருந்த மொழியையும் நாம் அகற்றிவிட வேண்டும் என அர்த்தமில்லை.

"பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கற்பிக்கப்படுவதை நிறுத்திவிடச் சிலர் துடிக்கிறார்கள். அப்படிச் செய்யப்பட்டு விட்டால், நமது பிள்ளைகளுக்கும் நமது நாட்டின் எதிர்காலத்திற்கும் பெருங் கேடு விளைவித்தவர்களாவோம்.

"இந்தியாவில் ஆங்கிலம் பேசுபவர்களின் தொகை அதிகமாக இருக்கிறது, வரவர அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. சில அரும் பெரும் இலக்கியங்களும், விஞ்ஞானத் துறையில் பல நூற்றுக்கணக்கான நூல்களும் ஆங்கிலத்தில் இருக்கின்றன. 'அணுச்சக்தி' போன்ற உயர்ந்த விஞ்ஞான வளர்ச்சி பற்றிய நூல்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப்படுகின்றன. இவ்வளவு நாட்களும் அந்த மொழியில் அவைகளைப் படித்தோம். இன்னும் அந்த மொழியிலேயே படிக்க வேண்டிய அவசியத்திலிருக்கிறோம். இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகில் பெரும்பான்மையாக இந்த அவசியம் இருக்கிறது. விஞ்ஞான நுட்பம் பற்றிய தொழில்துறை நூல்கள் கூட, முழுவதும் தேசிய மொழியில் வெளியிடப்படக் கூடிய காலம் ஒன்று வரலாம். அதற்கு ஆண்டுகள் பலப்பல பிடிக்கும். விஞ்ஞான வளர்ச்சியிலும், அணு ஆராய்ச்சியிலும் இந்தியா மிகவும் அக்கரை காட்டுகிறது. தற்சமயம் அதில் ஈடுபாடு கொண்டுள்ள விஞ்ஞானிகளும் மாணவர்களும் ஆங்கிலத்தில்தான அதை நடத்த வேண்டியிருக்கிறது.

"எல்லா நாடுகளும் கூடும் உலக மாநாடுகள் நாள்தோறும் நடந்தபடி இருக்கின்றன. இந்தியாவின பிரதிநிதிகள் அதில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். அந்த மாநாடுகளில் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருபவர்கள் ஆங்கிலத்தில் தான் தமது கருத்துக்களைத் தருகிறார்கள். ஆங்கிலம் தெரிந்திருப்பதானது நமது பிரதிநிதிகளுக்கு பெரிய அனுகூலமாயிருக்கிறது.

"இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதில் பெரும்பாலாக காமன் வெல்த் நாடுகளுடனும், அமெரிக்காவுடனும் வாணிபம் நடைபெறுகிறது. இதற்கு ஆங்கிலம் தான் பயன்படுகிறது. வாணிபத்திற்காக வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலம் இன்றியமையாததாக இருக்கிறது. உல்லாசப் பயணத்திற்காகவும், நாட்டைச் சுற்றிப் பார்க்கும் எண்ணத்துடனும், வெளிநாட்டார்கள் இந்தியாவுக்கு வரவேண்டுமென இந்திய அரசாங்கம் அதிகப் பிரயாசை எடுத்துக் கொள்கிறது. இந்தியாவில் இயற்கைக் காட்சிகளும் வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களும் ஏராளமாக இருக்கின்றன. வெளிநாட்டார்கள்-அதிக அதிகமாக வந்து போக வேண்டுமென்றால் அவ்வாறு வருபவர்களில் பெரும்பான்மையோர் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்—இங்கு பல துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருப்பதுதான் நல்லது. ஆங்கிலம் தெரிவது குறைந்தால், வெளிநாட்டார்கள் வருவதால் கிடைக்கும் வருமானமும் வெளிநாட்டு நிதி நிலைமையும் சீர்கேடடையும்.

"இந்தியா முழுவதிலும் மாற்றலாகிச் செல்லக்கூடிய உயர்தர அதிகாரிகளுக்கு தம் குழந்தைகளை அடிக்கடி பள்ளிக்கூடம் விட்டு பள்ளிக்கூடம் மாற்ற வேண்டியிருக்கிறது. ஆங்கிலம் எடுக்கப்பட்டு விட்டால், பொதுவான தொடர்பு குறைந்து ஒரு பகுதியிலுள்ளவர்கள் மற்றொரு பகுதிக்குச் சென்று படிக்க முடியாது. குழந்தைகளின் படிப்புக்காகும் செலவும் குறையும். இந்தியாவில் மற்ற மொழிப் பிரதேசங்களில் ஏற்படக் கூடிய அதிருப்தியையும் கிளர்ச்சிகளையும் தவிர்க்க வேண்டுமானால், இந்தியைத் திணிப்பதைக் கைவிட வேண்டும். இந்தி தெரியாத கோடிக்கணக்கான மக்கள்மீது, இந்தியைக் கட்டாயப் படுத்துவதைக் கைவிட வேண்டும். இதற்காக இப்பொழுது ஏராளமான பணமும், நேரமும், உழைப்பும் வீணாக்கப்படுகின்றன. தவிர்க்கக்கூடிய கேடுகளையும் சிக்கல்களையும் கட்டாயப்படுத்துவதால், நமது சிறுவர்களுடைய கல்வி சிதைக்கப்பட்டு, செம்மைப்படாத வகையில் அது தரப்படுகிறது.

"சுதந்திரத்துக்காகப் போராடும்பொழுது நாம் ஆங்கிலத்தையே உபயோகித்தோம், ஆங்கிலத்தின் துணை கொண்டே சுதந்திரத்தை அடைந்தோம். வெளியுலகுடனும், உள்நாட்டிலுள்ள மாநிலங்கள் ஒன்றுக்கொன்றுடனும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் மிகவாகப் பயன்பட்டிருக்கிறது. ஆங்கிலக் கல்வியை நாம் புறக்கணித்துவிட்டால், நமது பொருளாதார, வாணிப, அறிவியல் துறைகள் அனைத்தும் வளர்ச்சி குன்றும், வெளியுலகில் நமக்குக் கிடைத்துள்ள இடமும் தொடர்பும் பாழ்படும்.

"இந்தக் காரணங்களால் ஆங்கிலத்தை நாம் கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டும். தேசியம் என்று சொல்லிக் கொண்டு, கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக சேமிக்கப்பட்டுள்ள அருஞ் செல்வத்தை நாம் இழந்துவிடக் கூடாது.

"உலகில் ஆங்கிலம் பேசக் கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது. பாண்டுங் மாநாட்டில் கூடிய ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் பெரும்பாலோர் ஆங்கிலத்தில்தான் பேசினார்கள். உலகப் பொது மொழியாகக் கூடிய இடத்திலிருக்கும் ஆங்கிலத்தை நாம்மட்டும் இடரென்று ஏன் விலக்கிவிட வேண்டும்?

"இந்தியாவின் தேசிய மொழியாக ஆங்கிலத்தை வைத்துக்கொள்வதற்கு எதிராக, என்ன பொருத்தமான காரணங்கள் கொடுக்க முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. நமது வட்டாரத்துச் சொந்த மொழிகளில் வளமான இலக்கியங்கள் இருக்கின்றன, சொந்த மொழியுடன் ஆங்கிலத்தையும் சேர்த்துப் பயின்றால் எந்தக் குறையும் ஏற்படாது. சொந்த மொழியுடன், வேறு ஒன்றுஅல்ல இரண்டு பிரதேச மொழிகளைப் பயிலுமாறு மாணவர்களை நாம் ஊக்குவிக்கலாம்.

"நாம் மிகவும் நேர்மையுடனும், பயமில்லாமலும் கவனித்துப் பார்த்தால், இந்தியாவின் தேசிய மொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும் என்ற முடிவைத்தான் எடுக்க வேண்டும். அத்தகைய முடிவை அமைதியுடனும் தைரியத்துடனும் எடுப்போமாக! இன்றைக்கும் வருங்கால சந்ததியினருக்கும் அது நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கித் தந்ததாக இருக்கும்!

"நாம் ஒன்றுபட்டு, ஆங்கிலம் இந்தியாவின் தேசிய மொழி என ஏற்றுக்கொள்வோமாக!"

# ஏகர் விலை ரூ. 15

### நிலம் இங்கில்லை, செவ்வாய் கிரகத்தில்!

செயற்கைச் சந்திரன் விடப்பட்டபின், பூமியிலிருந்து சந்திரனுக்கும் மற்ற கிரகங்களுக்கும் செல்லக்கூடும் என்ற நம்பிக்கை வலுப்பெற்றுள்ளது. சந்திரனுக்குப் போவது முடியுமென்றாலும் அங்கு மனிதர்கள் வசிக்கக் கூடுவதற்கு தட்பவெப்ப நிலையும், காற்று, பிராணவாயுவின் அளவு, உணவு முதலியவைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வசிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள்.

செயற்கைச் சந்திரன் விடப்பட்டபின் செவ்வாய் கிரகத்துக்குப் போகலாம் என்ற நம்பிக்கை எந்த அளவு வளர்ந்திருக்கிறது என்றால், செவ்வாய்க் கிரகத்தில் இப்பொழுதே நிலம் வாங்க ஆரம்பித்து விட்டார்கள்! ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்யோ நகரில் "செவ்வாய் நிலங்கள் விற்பனை செய்யப்படும்" என்ற விளம்பரப் பலகையுடன், ஒரு வியாபாரக் கம்பனி ஏற்பட்டு விட்டது! செவ்வாயிலுள்ள நிலங்களை பூமியிலிருப்பவர்கள் விற்பதா? அப்படி யாரோ விற்றாலும் இங்கு யார் வாங்குவார்கள்? என்று நமக்குத் தோன்றும். ஆனால் ஜப்பானில் உள்ள செவ்வாய் நில விற்பனை கம்பனி மிக மும்முரமாக செவ்வாய் கிரக நிலங்களை விற்று வருகிறதாம்.

முதலில் ஏகர் 3 ரூபாய் மதிப்பில் செவ்வாய் நிலங்களை விற்று வந்தார்கள். இப்பொழுது, செயற்கைச் சந்திரன் விடப்பட்டபின், செவ்வாய்க்கு போகலாம் என்ற நம்பிக்கை அதிகமாகி ஏகர் 3 ரூபாய் விற்ற நிலங்கள் இப்பொழுது ஏகர் 15 ரூபாய்க்கு உயர்ந்துவிட்டன. அப்படி உயர்ந்தும், அந்தக் கம்பனியின் வெளியில் நாள்தோறும் ஏராளமானவர்கள் செவ்வாயில் நிலம் வாங்கும் விண்ணப்பத்தாள்களுடன், "கியு" வரிசையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தபாலில் வரும் விண்ணப்பங்கள் குன்றுபோல் குவிந்து விடுகிறதாம்! செவ்வாய் கிரகத்திலுள்ள நிலங்களை இப்பொழுதே வாங்கிவிடப்போட்டி போட்டுக்கொண்டு மக்கள் வருகின்றார்கள்.

செவ்வாயில் நிலம் வாங்க முன் வருகிறவர்கள் முதலில் ஒரு உறுதி மொழிப் பத்திரத்தை எழுதித் தரவேண்டும். அதில் "நான் கலைகளை நேசிப்பவன், விஞ்ஞானத்தை மதிப்பவன், பரந்த மனப்பான்மையுடையவன், பேராசையற்றவன், அமைதிக்காகப் பாடுபடுபவன்" என்ற உறுதிமொழியை

(11-ம் பக்கம் பார்க்க)

# மன்றம்

ஞாயிறு 20—10—57 சென்னை


## நமது உரிமை!

★

இந்தி ஆதிக்கத்தை தென்னகம் ஏற்றுக்கொள்ளாது என்பதை அக்டோபர் 13ஆம் தேதியன்றும் அதற்குப் பின்னும் தமிழ்நாடெங்கும் கூடிய எண்ணற்ற கூட்டங்களின் மூலம் டில்லி ஆட்சி பீடத்துக்கு இந்த நாட்டு மக்கள் அறிவித்துவிட்டனர். சிற்றூர்களிலும் பேரூர்களிலும் எடுக்கப்பட்ட எண்ணற்ற ஊர்வலங்களும், எழுப்பப்பட்ட பேரொலிகளும் எவராலும் அலட்சியம் செய்ய முடியாதன. ஆட்சியிலமர்ந்திருப்பவர்கள் எத்தகைய மமதையாளர்களாக இருந்தபோதிலும், இந்தி எதிர்ப்பு நாளில் பெருந்திரளாக மக்கள் கூடி நிறைவேற்றிய தீர்மானங்கள் தென்னாட்டின் உணர்வைப் புலப்படுத்தியிருக்கும்.

1937இல் இந்தியை எதிர்த்து அறப்போராட்டம் நடைபெற்றது. மக்கள் அதை மறந்துவிடவில்லை. அந்தக் காலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட எழுச்சியை ஆட்சியாளர்களும் மறந்துவிடக்கூடாது. 1937இல் இந்தி எதிர்ப்புப் போர் முடிவடைந்ததும், மீண்டும் ஒருதடவை இந்தியை எதிர்த்துப் போராடவேண்டிய நிலை தமிழகத்தில் உண்டாகும் என எவரும் நினைத்ததில்லை. மமதையுடன் வந்த இந்தி மண்டையிலடி வாங்கி திரும்பிச் சென்றதும், மீண்டும் வராது என நினைத்தோம். தமிழுக்கு ஏற்பட்ட இன்னல் நீக்கப்பட்டது, தமிழர்களை மாய்க்க வந்து நச்சு வாடை தடுக்கப்பட்டது, தமிழகத்தைச் சூழவந்த இந்திப் பீடை விரட்டப்பட்டது என்றே தமிழர்கள் எண்ணினர்கள். ஆனல் இந்தி மீண்டும் தென்னகத்தை நோக்கிப் படையெடுத்துள்ளது!

அரசியல் ஆதிக்கத்தைப் பக்கத் துணையாகக்கொண்டு, மொழி ஆதிக்கம் இங்கு பரவ முனைகிறது!

அரசியல் சட்டத்தைச் சாட்சியாக அழைத்துவந்து, இந்த நாட்டை ஆக்ரமிக்க இந்தி முயல்கிறது!

இந்தியை அரசாங்க மொழியாக தென்னடு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்கு, டில்லி ஆதிக்கம் அது நிறைவேற்றிவைத்துள்ள அரசியல் சட்டத்தைக் காட்டுகிறது! 1965க்குள் அரசாங்க மொழியாக இந்தியைக் கொண்டுவருவதற்கான சூழ்நிலைகளை உண்டாக்கவேண்டுமெனவும், அதை ஆராய்ந்து ஆலோசனை கூற குழுக்கள் அமைக்கப்படவேண்டும் எனவும் அரசியல் சட்டம் கூறுகிறது. மொழி சம்பந்தப்பட்ட அரசியல் சட்டத்தை நிறைவேற்றிய அரசியல் நிர்ணய சபை மக்களின் முழுப் பிரதிநிதித்துவம் பெற்றதல்ல, மறைமுகமான தேர்தலில் சேர்க்கப்பட்ட ஒரு அமைப்பு ஆகும். அதில்கூட ஆளுங்கட்சியினரால் ஆலோசிக்கப்பட்டபொழுது ஒரு ஓட்டு வித்தியாசத்தில் மொழிபற்றிய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கட்சிக்கட்டுப்பாடு இல்லாதிருக்குமேயானல், அரசியல் நிர்ணய சபையில்கூட அது நிறைவேற்றப்பட்டிருக்குமா என்பது ஐயப்பாடே! கட்சிக்கட்டுப்பாடும், ஆளுங்கட்சியில் இந்தி வெறியினர் கொண்டிருந்த பிடிப்பும், இந்திக்கு ஆக்கந்தேடும் தீர்மானத்தை நிறைவேறச் செய்தன! எப்படியிருந்தபோதிலும், இந்தியல்லாத மற்றமொழி பேசுவோர்களின் விருப்பு—வெறுப்புகளை அந்த அரசியல் விதி அறியவில்லை. மாநிலங்களின் ஆதரவைப்பெற்று அந்தச் சட்டப்பகுதி நிறைவேற்றப்படவில்லை!

இந்தி வருவதற்கு ஆதரவாக அவர்கள் அரசியல் சட்டப் புத்தகத்திலுள்ள சட்டப் பிரிவுகளைப் புரட்டிக் காட்டுகிறார்கள்! மொழிபற்றிய விதியைப் படித்துக் காட்டுகிறார்கள்! அரசியல் மொழியாக இந்தியை ஆக்குவதற்கு உதவியாக அரசியல் சட்டம் இருப்பதை நாம் அறிவோம். ஆனல் அதை நாம் ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறுகிறோம்!

இந்தியைக் கொண்டுவருவதற்கென ஆதாரம் அரசியல் சட்டத்தில் இருப்பது உண்மைதான். ஆனல் அரசியல் சட்டம் கூறுவதுதான் முடிந்த - மாற்றமுடியாத - அசைக்க முடியாத-அழித்து எழுதமுடியாத - முடிவு என்பதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை!

அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டிருப்பதுதான் கடைசி எழுத்துகள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்!

மக்களுக்காகச் சட்டமேயொழிய, சட்டத்திற்காக மக்களைக் கொடுமைப்படுத்த முடியாது!

மக்களின் கவனம் வேறுபக்கங்களில் திருப்பப்பட்டிருந்த நேரத்தில், இந்திமொழியல்லாத மற்ற மொழியினர்களின் உரிமைகளைச் சூறையாடும் ஒரு சதித்திட்டத்தைச் சட்ட புத்தகத்தில் ஏற்றிவிட்ட காரணத்திற்காக, மற்றவர்கள்-குறிப்பாகத் தென்னட்டினர் தமது உரிமைகளையும் உணர்வுகளையும் மறந்துவிடவேண்டும் என்பது முடியாத காரியம். வேண்டுமானல் அவர்கள் செய்த சட்ட புத்தகம் மறக்கப்படலாம், அந்த டில்லி ஆதிக்கம் இங்கு மறுக்கப்படலாம்! மற்றவர்கள் ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டவர்கள் தங்களது ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட ஏதாவது ஒன்றை எழுதிவைத்துக்கொண்டால், அது வரலாற்றைத் தடுத்து நிறுத்தும் தடைக்கல்லாக எப்பொழுதும் இருந்துவிடாது! விழிப்புற்ற மக்களின் எழுச்சி வெள்ளம் அந்தத் தடைகளை இருக்குமிடந் தெரியாமல் புரட்டிவிட்டுச் செல்லும்!

அரசியல் சட்டம் அப்படியொன்றும் மாற்றமுடியாத,- மாற்றப்படாத பொருளல்ல, இதுவரை எவ்வளவோ தடவைகள் அதற்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மற்றொரு திருத்தத்தைக் கொண்டுவருவதால் ஒன்றும் மோசம் வந்துவிடாது!

இந்திய அரசாங்கம் செய்கிற சட்டத்தில் இருக்கிற முரண்பாட்டை சட்டமன்றம் சுட்டிக்காட்டினல், அந்தச் சட்டத்தை அரசாங்கம் திருத்தியமைக்க முற்படுகிறது. நேர்மையற்றதாக, நீதியற்றதாக இருக்கிற மொழிபற்றிய அரசியல் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் ஏன் முற்படக்கூடாது?

சட்டத்தைத் திருத்தியமைக்க அரசாங்கம் மறுத்தால், அரசாங்க அமைப்பைத் திருத்தியமைக்கவேண்டிய அளவுக்கு மக்கள் செல்வார்கள்!

டில்லியில் இருப்பவர்கள் சுட்டுவிரலை அசைத்துவிட்டார்கள் என்பதற்காக, இங்குள்ளவர்கள் இந்தி ஆதிக்கத்துக்கு அடிபணியமாட்டார்கள். நமது உரிமைக்கு நாம் போராடுகிறோம். நமது நாட்டில் என்ன மொழி இருக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யும் உரிமை நமக்குத்தான் இருக்கிறது. உத்தரபிரதேசத்தில் என்ன மொழி இருக்கவேண்டும்? அதை நிர்ணயிக்க நாம் முன்வரவில்லை. பீகார் மாநிலத்திலே எந்த மொழி கட்டாயப்படுத்தப்பட வேண்டும்? அந்த உரிமையை நாம் கேட்கவில்லை. பஞ்சாப் மாநிலத்தில் என்ன எழுத்து இருக்கவேண்டும்? அதை நிர்ணயிக்கவேண்டியவர்கள் அந்த மாநிலத்தவர்கள், வங்காளத்தில், மராட்டியத்தில், ஒரிசாவில், அசாமில் அங்கெல்லாம் உள்ளவர்கள் பயிலவேண்டிய மொழி எது? அது அவரவர்கள் விருப்பம், உரிமை. நமது நாட்டில் என்ன மொழி வரவேண்டும்? அதை நிர்ணயிக்கவேண்டியவர்கள் நாம், அவ்வாறு நிர்ணயிப்பது நமது உரிமை! மொழிபற்றிய நமது கருத்தை—உரிமையை அக்டோபர் 13இல் வலியுறுத்தினேம்! டில்லி ஆதிக்கம் அலட்சியத்துடனிருந்தால், நமது உரிமைகளை நிலைநாட்டுவதில் சிறிதும் பின்வாங்கோம் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

# ஆண்டிகள் மடம் கட்டுவதுபோல!

★

ஆண்டிகள் கூடி மடங் கட்டுவது போல என்று ஒரு பழமொழி உண்டு!

ஆலமரத்தடியிலோ அரச மரத்தடியிலோ ஆண்டிகளின் கூட்டம் இருக்கும். காலையில் எழுந்ததும், குளித்துவிட்டோ குளிர் அதிகமாக இருந்தால் குளிக்காமலேயோ, விபூதியைப் பூசிக்கொண்டு, அவர்கள் வெளிக் கிளம்புவார்கள். கொஞ்சம் வசதியுள்ள பண்டாரத்திடம் பித்தளைக் காவடி இருக்கும், வசதி குறைந்தவரிடம் யாழ்ப்பாணத்துத் தேங்காய்த் திருவோடு இருக்கும். அதுக்கும் குறைந்த பஞ்சைப் பண்டாரத்திடம், மண்சட்டி தான் இருக்கும். வசதிக்குத் தக்க திருக்கோலத்துடன, வயதுக்கேற்ற கூச்சலுடன், "சங்கரா, சங்கரா"! என கைலைவாழ் ஈசன் பெயரைச் சொல்லி, அந்த ஊரில் வாழ் மக்களிடம் பிச்சை ஏற்பார்கள். தொல்லையான வேலைதான்! பல்விதமான சோறுகள்— வெந்தசோறு, வேகாதசோறு, கல்லும் மண்ணுங் கலந்த அரிச்சோறு, எல்லாம் ஒன்றாக வந்து, குமட்டல் எடுக்கும், குடலைப் புரட்டும்! பிச்சை யன்று வந்ததும், அறுசுவை உண்டியை உத்தரவிட்டுப் பெற முடியுமா? சங்கரனையோ சாம்பசிவத்தையோ பாடிப் பிச்சைக் கேட்டால், சட்டியில் எது வந்து விழுகிறதோ அதைத்தான் தின்றாகவேண்டும். இப்படியாகப் பகல் முழுவதும் ஊர்முழுவதும், பங்கு போட்டுச் சுற்றிக்கொண்டிருந்துவிட்டு, இரவு மீண்டும் ஆலமரத்தடியில் வந்து, சுமைதாங்கிக்குப் பக்கத்தில் பண்டாரங்கள் உட்காருவார்கள்! குளிரடித்தாலும், மழை கொட்டினாலும் எப்படியேனும் ஒதுங்கியிருந்து, இரவுப் பொழுதைக் கழிக்கவேண்டும். இவ்வாறு நாள்தோறும் இருக்கச் சரியான இடமில்லாமல் அவதிப்படவேண்டியிருக்கிறதே, இதற்கு ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும் என ஆண்டிகள் யோசிப்பார்கள்.

"ஒரு பெரிய மடம் கட்டிவிட்டால், எல்லாத் தொல்லைகளும் தீர்ந்துவிடும்" என, ஒரு ஆண்டி தெரிவிப்பார்.

"ஆமாம், ஒரு மடம் கட்டிவிட்டால் நல்லதுதான்!" என்று மற்றவர்கள் உற்சாகத்துடன ஆதரிப்பார்கள்.

"குளத்தங் கரைக்குத் தென்பண்டையில் பெரிய தரிசு கிடக்கிறது. அது நமக்குக் கிடைக்கும்!"

"மடம் பெரிய இடமாக இருக்கவேண்டும். நூறுபேர் வரை தங்க வசதி இருக்கவேண்டும்!"

—(0)—

## இயலாத திட்டங்களைப் போட்டு ஏமாறும் விதம்!

—(0)—

"முன்னால் பெரிய தாழ்வாரம். அதற்குமேல் இரண்டு பக்கத்திலும் நீண்ட திண்ணை!

"படுத்தால், நன்றாகக் கால் நீட்டுகிற அளவுக்கு திண்ணை இருக்கவேண்டும்!"

"உள்ளே ஒரு வாசல்!"

'சுற்றிலும் முற்றம், அதற்கப்புறம் நான்கு அறைகள்!"

"இது முதல் கட்டில். இரண்டாவது கட்டில், ஒரு கிணறு, தண்ணீர்தொட்டி!"

"மூன்றாவது கட்டில் சமையல் இடம், சாமான் அறை எல்லாம்!"

"தோட்டத்தில் வாழைகள் போட்டுவிடலாம். சாப்பிட, மண் ஓட்டையும் கொட்டாங்கச்சியையும் தூக்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. சாப்பாட்டு நேரத்தில் ஆளுக்கொரு வாழையிலையை அறுத்து வந்து, திவ்வியமாகப்போட்டுச் சாப்பிடலாம்"

இப்படியாக ஆண்டிகளின் மனக்கண்முன், வசதியான மடம், அதில் பெரிய கூடங்கள் அங்கு வேளா வேளைக்கு தலைவாழை இலை போட்டு தாராளமான சாப்பாடு, சாப்பிட்டதும் படுக்க நிம்மதியான திண்ணைகள், திண்டு தலையணைகள்— இவையெல்லாம வந்துபோகும் மடத்தின் அளவும் வகையும் நேரம் ஆக ஆக, விரிவடைந்து கொண்டே போகும். எவ்வளவு மாளிகைகளை. பெரிய மடங்களை, சத்திரங்களை, சாவடிகளை, அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மனதில் வைத்து, மடத்தைக் கட்டத் திட்டம் போடுவார்கள். இரவில் குளிர் அதிகமாகி அதற்குமேல் உட்கார்ந்திருக்க முடியாது என்ற நிலை பிறக்கிற வரை, ஆண்டிகளின் பேச்சில் மடம் வளர்ந்தபடி இருக்கும். பிறகு ஏதோ இடம் பார்த்து படுத்துத் தூங்கி விடுவார்கள் காலையில் எழுந்ததும், பழைய படி மண்சட்டியோ தேங்காய் ஓட்டையோ தூக்கிக்கொண்டு பிச்சைக்குப் புறப்பட்டு விடுவார்கள்!

ஆண்டிகள் மடங் கட்டுகிற கதையைப் போலத்தான், இந்திய அரசாங்கத்தினர் போடுகிற திட்டங்கள் இருக்கின்றன. திருச்செந்தூரில் மடம் இப்படி யிருந்தது. திருவண்ணாமலையில் அப்படி ஒரு மடம் இருக்கிறது. பழனியில் ஒரு மடம் இருக்கிறது, பாபநாசத்தில் ஒரு மடம் இருக்கிறது என்று பல ஊர்கள் போய் பல மடங்களின் சுகங்களைப் பார்த்த ஆண்டிகள், அதைப்போல தங்களூரில் தங்களுக்கும் ஒரு மடம் கட்டிக்கொள்ள வேண்டுமென நினைப்பதைப் போல, அமெரிக்காவில் இருப்பதைப் போல ஒரு பெரிய கட்டடம், ஆஸ்திரேலியாவில்இருப்பதைப்போலஒருநீண்ட பாலம், செர்மனியில் இருப்பதைப்போல ஒரு இரும்புத் தொழிற்சாலை, என்று இப்படி மற்ற நாடுகளை நினைத்து நினைத்து, அவைகளைப்போல இங்கும் உண்டாக்க இந்திய அரசாங்கத்தினர் திட்டமிட்டு விடுகின்றனர்.

இவர்கள் போடுகின்ற திட்டங்கள் பிரமாதமாக இருக்கின்றன. ஆனால் அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வசதிகளை இவர்கள் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. திட்டத்திற்கான பணத்தைத் திரட்ட இவர்களால் முடிவதில்லை. திட்டத்திற்கான பணம் கிடைத்தாலும் திட்டம் சரியாக நிறைவேற்றப்படுவதில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களில் இவர்கள் மிக அடிப்படையாக வைத்துள்ளது உணவு உற்பத்தி! உணவு உற்பத்தியை அதிகமாக்க இவர்கள் பெரிய திட்டங்களைப் போட்டார்கள். உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்பதை யாரும் எதிர்க்கமாட்டார்கள். ஆனால் இந்திய அரசாங்கம் போடுகிற உணவுத் திட்டங்கள் இதுவரைச் சரிவர நிறைவேறவில்லை! தங்களால் முடியக் கூடிய அளவைவிட அதிகமான அளவுக்கு அவர்கள் திட்டம் போட்டு விடுகிறார்கள். பின்னால் எதிர்பார்த்த அளவு கிடைக்காமல் ஏமாற்றம் அடைகிறார்கள்!

★

உணவு உற்பத்தியை அதிகமாக்குவது என்ற நோக்கத்துடன்தான், முதல் ஐந்தாண்டுத்திட்டம் போடப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்பார்த்தபடி செலவுகள் செய்யப்பட்டன, ஆனால் எதிர்பார்த்தபடி பலன்கள் கிடைக்கவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முன்னேற முன்னேற, உணவு உற்பத்தி குறைந்து வந்திருக்கிறது. அவ்வாறு குறைந்ததற்குப் பலப்பல காரணங்கள் தரப்பட்டன. ஒரு ஆண்டில் மழை குறைவு என்றும், அடுத்த ஆண்டில் மழை மிக அதிகம் அதனால் வெள்ளம் வந்து விட்டது எனவும் இவ்வாறு இயற்கையின் மாறுதல்கள் காரணமாகக் காட்டப்பட்டன. எதுவாக இருப்பினும் உணவு உற்பத்தி குறைந்தது என்பதை அரசாங்கம் தந்துள்ள புள்ளி விவரங்களே வெளிப்படுத்துகின்றன.

அரசாங்கக் கணக்குப்படி 1953-முதல், 1956 வரை கிடைத்த உணவு உற்பத்தி கீழே குறிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | உணவு உற்பத்தி |
|---|---|
| 1953-54இல் | 6 கோடி 88 லட்சம் டன் |
| 1954-55இல் | 6 கோடி 65 லட்சம் டன் |
| 1955-56இல் | 6 கோடி 34 லட்சம் டன் |

இவ்வாறு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவு காலத்தில் உணவு உற்பத்தி குறைந்து கொண்டே வந்திருக்கின்றது,

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இருந்ததைவிட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்தியை எப்பாடுபட்டேனும பெருக்கிவிடுவது எனத்திட்டமிட்டார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் உணவு உற்பத்தி 6 கோடி 40 லட்சம் டன் சராசரியாக எடுத்துக்கொள்ளப்பட்டது. திட்டத்தின் இறுதியில் இதை 7 கோடி 50 லட்சம் டன்னாக உயர்த்த வேண்டுமெனத் திட்டமிட்டார்கள். அதன்படி ஒவ்வொரு ஆண்டிலும் இவ்வளவு டன் உணவு இந்த ஆண்டில் அதிகமாக்க வேண்டுமென அவர்கள் தீர்மானித்தார்கள்.

1956-57-இல் 25 லட்சம் டன் அதிகமான உணவு உற்பத்தி செய்வதென அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால் உற்பத்தி செய்த கணக்கைப் பார்த்தால், 25 இலட்சத்திற்குப் பதிலாக 14 இலட்சம் டன் தான் உணவு கிடைத்தது!

போடப்பட்ட திட்டத்தில் இவர்கள் எதிர்பார்த்த அளவு உணவு கிடைக்கவில்லை ஆனால் அண்மையில் ஸ்ரீநகரில் கூடிய உணவு மாநாட்டில், பேசிய எஸ். கே. டே என்பவர் இப்பொழுதுள்ளதைவிட பாதி மடங்கு அதிகமாக்குவதெனச் சொல்லியுள்ளாராம், அதாவது 6 கோடி 40 லட்சம் டன் உணவு உற்பத்தி இப்பொழுதிருந்தால், 1960-இல் அதை 9 கோடி 60 லட்சமாக ஆக்குவது எனத் திட்டமிட்டாராம்!

ஆலமரத்தடியில் ஒதுங்கிக் கொண்டு அல்லற்படுகின்ற ஆண்டிக்குப் புதிதாக ஒரு மடம் என்றால் உற்சாகம் கிளம்புவதைப்போல, உணவுப்பற்றாக் குறையால் அல்லற்படுகிற

(12-ம் பக்கம் பார்க்க)




**வினா:** இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகவோ, பொது மொழியாகவோ ஆகும் தகுதி படைத்ததா?

**விளக்கம்:** ஆட்சி மொழியாகவோ, பொது மொழியாகவோ ஆகும் தகுதி, இந்திக்கு, இன்றைய நிலையில் அறவே இல்லை. என்றாலும் வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள், எப்படிப்பட்ட சப்பைக் கட்டுக்களைக் கட்டியாவது இந்தியை மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி மொழியாகவும் பொது மொழியாகவும் ஆக்கி விடவேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறார்கள்.

இந்தி மொழி இலக்கண இலக்கியச் சிறப்பிலோ, சொல் வளத்திலோ, வனப்பிலோ, பண்டுதொட்டு வழங்கும் பெருமையிலோ, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் நிலவும் உரிமையிலோ சிறந்து விளங்கும் ஒரு மொழியல்ல. இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளம், மராட்டியம் போன்ற மொழிகள் இந்தியைவிடப் பழம் பெருமை படைத்தவை; இலக்கண இலக்கியச் சிறப்பிலே மேம்பட்டவை; வனப்பிலே சிறந்தவை; சொல்வளம் மிக்கவை. இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் நிலவியிருக்கும் தன்மையை மற்ற மொழிகள் எப்படிப் பெறவில்லையோ, அப்படியே இந்தி மொழியும் பெறவில்லை.

அது உலக நாடுகளோடு அரசியல் தொடர்பு கொள்ளுவதற்கு ஏற்ற மொழியா என்றால், அதுவும் இல்லை.

உலக வாணிகம் புரிவதற்குத் தகுந்த மொழியா என்றால் அதுவும் இல்லை.

உலக அறிவியலைக் கண்டறிந்து உடனே அதனை நமக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய அறிவியற் சொற்கள் நிரம்பிய மொழியா என்றால், அதுவும் இல்லை.

இந்த இந்தியத் துணைக்கண்டத்திற்கே முழுக்க முழுக்க உரிமையுடைய மொழியா என்றால், அதுவும் இல்லை. அதன் பெயரான இந்தி, என்ற சொல்லே அராபியம் ஆகும்; அதில் கலந்திருக்கும் சொற்களிலே பாரசீகச் சொற்களும், அராபியச் சொற்களும் மிகவானவையாகும்.

அது உயர்தனிச் செம்மொழிகளிலே (classical languages) ஒன்றா என்றால், அதுவும் இல்லை. பாரசீகம்-அராபியம்-சமஸ்கிருதம் ஆகிய மொழிகளின் கூட்டுறவால் மிக அண்மைக் காலத்தில் அதாவது எண்ணூறு ஆண்டிற்குள் தோன்றிய கலப்பு மொழியாகும்.

அது ஒரே மொழியாக நின்று நிலவுகிறதா என்றால், அதுவும் இல்லை. அது, ஒன்றிற்கொன்று மிக்க நெருங்கிய தொடர்பில்லாமல் 12-வகையாகப் பிரிந்து காணப்படும் மொழியாகும்; அவற்றில் ஒரு வகையே எல்லாவற்றிற்கும் பொதுவாக இருக்கும்படி ஆக்கப்பட்டு வருகிறது.

அது, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவலாகப் பரந்து காணப்படும் மொழியா என்றால், அதுவும் இல்லை. வடநாட்டின் மத்தியப் பகுதி மாநிலங்களில் மட்டும் பல்வேறு வகையாக வழங்கும் மொழியாகும்.

அது, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை வளர்த்த மொழியா என்றால், அதுவும் இல்லை. தமிழ், வங்காளம், மராட்டியம் ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தி மிகத் தாழ்ந்த தரத்தைச் சேர்ந்ததாகும்.

அது, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் உள்ள மக்களில் பெரும்பாலோரால் பேசப்படுகின்ற மொழியா என்றால், அதுவும் இல்லை. இந்தி-உருது- இந்துஸ்தானி- பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளையும் பேசுபவர்களைச் சேர்த்துக் கணக்கிட்டு இந்திய அரசியலார் தரும் கணக்கு சற்று குறைய பதினைந்து கோடியாகும்.

அது, வடநாட்டு ஆதிக்க வெறியர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்பு அவையிலாவது பெரும்பான்மை உறுப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆட்சி மொழியா என்றால்; அதுவும் இல்லை. அரசியல் அமைப்பு அவையில் இந்தியை ஆட்சிமொழியாக்கும் சட்டப் பிரிவு வாக்கெடுப்புக்கு விட்ட பொழுது அதற்கு ஆதரவாக 77 பேர்களும், எதிர்ப்பாக 77 பேர்களும் வாக்கு அளித்திருக்கின்றனர். முதல் முயற்சி கைவிடப்பட்டு மீண்டும் ஒருமுறை பிறிதொருநாள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொண்டபோது ஆதரவாக 78 பேர்களும், எதிர்ப்பாக 77பேர்களும் வாக்கு அளித்திருக்கின்றனர். ஒரே ஒரு வாக்கை மிகவாகப் பெற்றுத்தான் இந்தியை ஆட்சிமொழியாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இவ்வாறு எந்த ஒரு உருப்படியான காரணத்தையும் கொண்டிராத இந்தியை, எந்தக் காரணத்தைக் காட்டித்தான் ஆட்சி மொழியாகவும், பொதுமொழியாகவும் திணிக்கிறார்கள் என்று பார்த்தால், தமிழ்- தெலுங்கு- வங்காளம்- மராட்டியம் போன்ற மொழிகளைத் தனித் தனியாக வைத்து, இந்தி என்ற போர்வையில் உள்ளடக்கி இருக்கும் மொழிகளைத் தனியாக ஒன்று சேர்த்து, அதனை முன்னைய மொழிகளோடு தனித்தனியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திமொழிக்குழுவினர்பெரும்பான்மையோராகக் காணப்படுகின்றனராம். இந்தியல்லாத மொழி பேசுவோரை ஒரு பக்கமும் இந்திக் குழுமொழிகளைப் பேசுவோரை ஒரு பக்கமும் நிறுத்தினால், அப்பொழுது இந்திமொழிக் குழுவினர் சிறுபான்மையோராகத்தான் காணப்படுகின்றனர். தனித்தனி நிறுத்திப் பார்க்கும்போதுதான் இந்திமொழிக் குழுவினர் பெரும்பான்மையோராகத் தென்படுகின்றனர். இப்படிப் பார்க்கப்படும் பெரும்பான்மைக் காரணம் ஒன்றே ஒன்று மட்டும் போதுமா இந்தியை இந்தியத் துணைகண்டத்தின் ஆட்சி மொழியாகவும், பொதுமொழியாகவும் ஆக்குவதற்கு? போதாதுஎன்கின்றனர் அறிஞர் பெருமக்கள்! போதும் என்கின்றனர் வடநாட்டு இந்தி மொழி வெறிபிடித்த ஆதிக்கக்காரர்களும், அவர்களுக்கு அடிமைபோன சில தென்னாட்டுக்காரர்களும்.

ஆன்றோரும், சான்றோரும், அறிஞர்களும், புலவர்களும் பலராக நிரம்பிய அவையில் அறிவும் ஆற்றலும் அறவே அற்ற முட்டாளான ஒருவனை, அவன் மற்றவர்களைக் காட்டிலும் பருத்திருக்கிறான் என்ற ஒரு காரணத்தைக் காட்டி, அவனைக் குழுமியிருப்போர்க்குத் தலைவனாக ஆக்குவது எவ்வளவு பெரிய முட்டாள் தனமாகுமோ, அவ்வளவு பெரிய முட்டாள்தனம் ஆகும், வளமிக்க மொழிகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, அற்ப இந்தியை இந்தியாவின் பொது மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக்கியிருப்பது.

மொகலாய - போர்த்துகீசிய டச்சு-பிரெஞ்சு-ஆங்கில ஏகாதிபத்தியங்கள் தத்தம் ஆதிக்க ஆட்சி ஏற்படுத்தியவுடன் எ[...] படித் தத்தம் மொழியை ஆட்[சி] மொழியாக்கத் திணித்தா[ர்]களோ அதுபோலவே வட நாட்டு இந்திமொழி வெறிய[ர்]களின் ஏகாதிபத்தியம் இந்[தி] மொழியை ஆட்சிமொழியா[க] ஆக்கியிருக்கிறது. அறியாமை நிரம்பிய காலத்தில் புகுந்[த] ஆங்கிலமாவது காலப்போ[க்]கில் பல்வேறு வகைகளில் பயன்தரும் ஒரு மொழியா[க] அமைந்துவிட்டது. ஆனா[ல்] அப்படிப் பயன்படக்கூடிய தன்மை எதுவுமற்ற இந்[தி] விடுதலை வேட்கையுணர்[வு] பொங்கி எழும் இந்தக்கால[த்]தில், வேண்டாதவர்களிட[ம்] வேண்டுமென்றே திணிக்கப்படுகிறது.

எனவே இந்தியாவின் ஆட்சி மொழியாகவோ, பொதுமொழியாகவோ இருப்பதற்கு இந்தி மொழி எவ்வகையிலும் தகுதியற்ற ஒரு மொழியாகும் என்பதை மேற்காட்டப்பட்ட காரணங்களால் நன்கு உணரலாம்.

* * *

**வினா:** இன்றைய நிலையில் இந்தியாவின் பொதுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் இருப்பதற்குத் தகுதி படைத்த மொழி எது?

**விளக்கம்:** இன்றைய நிலையில் இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் இருப்பதற்கு ஏற்புடைத்த மொழியாக விளங்குவது ஆங்கிலமேயாகும்.

அகில இந்தியக் கண்ணோட்டத்தில் நின்று பார்த்தாலும் சரி, திராவிடநாட்டுக் கண்ணோட்டத்தில் நின்று பார்த்தாலும் சரி, அகில உலகிற்குப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலமே இந்தியத் துணைக் கண்டத்திற்கும், திராவிடத்திற்கும் பொதுமொழியாக விளங்கலாம்.

ஆங்கிலத்தைப் புறக்கணித்து எந்த மாநிலமும் தன் மொழியோடோவோ அல்லது இந்திபோன்ற பிற இந்திய மொழிகளோடோவோ முழுக்க முழுக்க வாழ்ந்துவிட முடியாது. உலகத் தொடர்பு கொள்ள, உலகவாணிகம் புரிய, உலக அறிவியலை அறிய ஆங்கிலத்தை ஒவ்வொரு மாநிலமும் கட்டாயம் கற்றே தீர வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் அகில உலகத் தொடர்புக்கென்று கற்றுக்கொள்ளுகிற ஆங்கிலத்தையே, அகில இந்தியத் தொடர்புகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாட்டு மாநிலம் தன் மொழியோடு ஆங்கிலத்தையும் கற்றுத் தீரவேண்டிய நிலையிலிருக்கிறது. அதுபோலவே உத்திரப்பிரதேசமும் தன் மொழியோடு ஆங்கிலத்தையும் கற்றுத் தீரவேண்டிய நிலையிலிருக்கிறது. ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட்டு இந்த மாநிலங்கள் இந்தியை

(10-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# பெண் மனம்

(நெல்லை அருணன்)

“அழகு மேனி, அமைப்பான உருவம், அத்துடன் ஆற்றல் அறிவு அடக்கம் இவையெல்லாம் ஒருசேர வாய்க்கப் பெற்றிருக்கும் உன்னைக் கண்டால், ‘பெண்களுக்குத் தன்னைத் தவிர பிற பெண்களைக் காணும்போது பொறாமை தான் ஏற்படும்’ என்பார்கள்-ஆனால் எங்களுக்கோ உன்னைக்கொண்டு பெருமை தான் ஏற்படுகிறது. அத்தகைய வழி காட்டிபோல நீ இருக்கிறாய். இருந்தாலும் உன்னை மகிழ்விக்கும் வழியெது என்பதை எங்களால் ஊகித்தறிய முடிய வில்லையே! ஒவ்வொரு நாளும் எழுவது முதல் உன் அலுவல்களை முடித்துக்கொண்டு இந்த அறையிலேயே அடைபட்டுக் கிடக்கிறாயே! வெளியுலகுக்கும் உனக்கும் பகையா? அல்லது வேறு விதமான நிகழ்ச்சிகள் உன் வாழ்வில் நேர்ந்து விட்டதா? அடிக்கடி அயர்ச்சி கொள்கிறாய்-பெருமூச் செறிகிறாய்-வானத்தைப் பார்த்துக் கண்ணீர் சொரிகிறாய்-அறை சன்னலின் பக்கம் அமர்ந்து மரக்கிளையில் விளையாடும் புள்ளினங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறாய்! இதற்கெல்லாம் பொருளென்ன வென்று புரியாமல் தவிக்கிறோம் நாங்கள். நீயும் ஏனையபெண்களைப்போல் விளையாட்டு வேடிக்கை கேளிக்கைகளில் கலந்து கொள்ளாமல் வேதனையே உருவாய் இருப்பதைக் காண நாங்கள் வேதனையடைகிறோம். எங்களுக்குத் தலைவி போலிருக்கிறாய்-உதவி ஒத்தாசைகள் செய்வதில் தோழியாகத் திகழ்கிறாய்-எங்கள் நலனில் பெற்றோர்களினும் பதின் மடங்கு கவனம் செலுத்திப் பாது காப்பளிக்கிறாய்-பிறர் தெரிந்து கொள்ளத் தயங்கும் எங்கள் அந்தரங்கங்களில் கலந்துகொண்டு அறவுரையும் அறிவுரையுங் கூறி எங்களை நல்வழிச் செல விடுவதில் ஆசிரியையாகத் திகழ்கிறாய் ஆனால் நீ மட்டும் நாங்கள் கண்டு வருந்து மளவுக்கு வாட்ட முற்றும்-கேட்டுக் கேட்டுச் சலித்துக் கொள்ளுமளவுக்கு ஏக்கத்தைத் தாங்கிக் கொண்டும்-எங்கள் பகுத்தறிவுக்கும் நுணுக்க அறிவுக்கும் புலனாகாத புதிர்போல பொலி விழந்தும்-இருக்கிறாய்-கேட்டால் மறுத்துக் கூற இயலாத காரணத்தால் வாளாவிருக்கிறாயே தவிர மாற்றம் கூறுகின்றாயில்லை. உன் உள்ளத்தில் நிறைந்துள்ள துயரந்தான் என்ன? பணக்கவலையோ - அல்லது மணப்பருவத்தின் கோளாறோ-இல்லையெனில் கொண்ட காதலில் குறை நேர்ந்துவிட்ட காரணத்தால் விளைந்த குமுறலோ என்றெண்ணுதற்கும் இயலவில்லை! ஏனெனில் இவ்விவற்றின் நிலையாமையையும் தன்மையையும் நீயே பன் முறை எங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கும் போது உன் வரையில் அவற்றை மறந்திருக்க மாட்டாயென்ற நம்பிக்கையிழந்துவிடவில்லை நாங்கள்! காரணம், பிறருக்குக் கூறுவதை உன் வரையில் நிகழ்த்திக் காட்டியே கூறும் பண்பாடு உடையவள் நீ என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம் சொல்! உன் ஏக்கத்திற்கும் தவிப்புக்கும் காரண மென்ன சொல்!”

என்று, தாயினும் பெரிதான பிரிவு காட்டி என்னைக் கேட்கும் தோழியர்கள் பலருண்டு. அவர்களுக்கு எதைக் கூறுவேன். குடும்பத்தில் நேர்ந்துவிட்ட குறைபாடு என்பேனா? காதலன் என்னைக் கைவிட்டுப் போனது தான் காரணம் எனக் கூறட்டுமா? இனிமேல் என் வாழ்வு எப்படியமையப் போகிற தென்பதைப் பற்றி இடையறாது சிந்தித்துக் கொண்டிருக்கிறேனென்று நொண்டிச் சமாதானம் சொல்லி அவர்களைத் தவிப்பினின்றும் நீக்குவேனா? எந்த வித மாற்றமும் கூற முடியாமல் தான் திகைத்துக் கொண்டிருக்கிறேன். அதை எவ்வாறு அவர்கள் அறிய முடியும்.

வையமெல்லாம் மகிழ்ச்சி ஆரவாரமும்-எழுச்சி முழக்கமும்-விழாக் கொண்டாட்டமும் நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் நான் தனிமையை அனுபவிப்பதைத்தவிர வேறு வகையே கிடையாது. இந்த அறை-அறையை விட்டு வெளிப் புறப்பட்டால் நேரே வகுப்பு அறை-அங்கிருந்து விடுபட்டால் மீண்டும் இந்தச் சாளரத்தின்பக்கம் அமர்ந்து என்பக்கமாக வளைந்துவரும் கிளைகளிலே விளையாடும் பறவையினங்களின் செயலுக்கும் வையத்து மாந்தர் வாழ்வுக்கும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதல்லாது வேறு வகை கிடையாது. என்னை நீங்கிய பிறரைக் காணுகின்ற போதெல்லாம் எனக்கும் அவர்களுக்கும் இணைப்பிருக்க வேண்டுமென நான் அவாவுவதில்லை. அவர்களுக்கும் வாழ்க்கைக்கும் இன்ன விதமான இணைவு இருக்க வேண்டுமென்பதைப் பற்றியே தான் சிந்திப்பேன். சிந்தித்ததைச் செயலாற்ற முனைந்திருப்பேன். இதுதான் என் நித்திய வாழ்க்கையென்கின்ற நீக்கமற்ற முடிவுக்கு வந்துவிட்டேன். பள்ளியிலே இளஞ்சிறார்களைக் காண்கின்றேன். அவர்கள் தோற்றமும் பொலிவும் கண்டு பூரிப்பதைவிட அவர்தம் வாழ்வில் எப்படியிருக்கவேண்டு மென்பதைப் பற்றிய புலன் நுணுக்கத்தில் நினைவைச் செலுத்துகிறேன். எல்லாக் குழந்தைகளும் இன்பத்தின் அடிப்படையாக-அடையாளமாகப் பிறந்தவைகள்தாம். என்றாலும் வாழ்வின் பெரும்பகுதி துன்பத்தின் எல்லைக்கல்லவா இழுத்துச் செல்லப்படுகிறார்கள், இதற்குக் காரணமறிந்து அதனைக் களைவதிலேயேதான் என் கருத்தைச் செலவிடுகிறேன். சுருங்கக் கூறவேண்டுமானால் தன்னைத் தான் வரையறுத்துக்கொண்டு நடக்கவேண்டுமென்ற தன்மையை அவர்கள் பழக்கத்திற் கொள்ளச் செய்கிறேன். இதன் பலன் என்னவாகுமோ என்று வருங்காலத்தின் தொலைதூரத்திற்கு நான் சென்று சிந்திக்குமுன்னர், ஏனைய வகுப்பாசிரியைகளின் பாராட்டுகளின் மூலம் என் எண்ணம் ஈடேறிவிட்டதை எண்ணி உள்ளூற மகிழ்வேன். அவர்களெல்லாம் என் வகுப்பிலிருந்துவரும் மாணவர்கள் பண்பாடு, ஒழுக்கம், கடமை எண்ணம், களவு கரவு நீங்கி இருத்தல், பொறுமை, புறங்கூறாமை ஆகியவற்றில் முதன்மைபெற்று விளங்குகிறார்கள் என்று கூறுவதைக் கேட்க, அவர்தம் பெற்றோர் மகிழ்வாரோ இல்லையோ பெற்றவரினும் அதிக மகிழ்வுற்றிருப்பவள் நான். அவர்களையெல்லாம் என் வயிற்றுப் பிள்ளைகள்போல் எண்ணிக் கொள்கிறேன். உடனுறை பணியாளர்களை என் உடன் பிறந்தாராகக் கருதுகிறேன். இயற்கையின் சூழல்களையும் நிகழ்ச்சிகளையும் எனக்குற்ற ஆசிரியர்களாகக் கருதிக் கொண்டிருக்கிறேன். இவற்றைவிட எனக்குற்ற அமைதியும்மகிழ்வும் வேறெதுவுமில்லை. என்போன்றநிலை எல்லாப் பெண்களுக்கும் ஏற்படவேண்டாம். இந்த நிலையின் காரணமாக நான் கற்றுக்கொள்கின்ற பாடம் வேண்டுமானால் அவர்கள் கற்றுக்கொள்ளட்டும். நான் ஏற்கின்ற அவதி எனக்கு வந்துற்ற அவலநிலை அவர்களுக்கு வரவேண்டாம்.

என்வரையில்தான் அவர்களுக்கு எத்தனை அன்பு-பாசம். இதற்கு நான் என்றும் கடமைப்பட்டவள். கைம்மாறு கருதாது என்மீது அவர்கள் காட்டும் பரிவுக்கு வையமும் வானமும் ஈடு இணையாக முடியாதுதான். அதைப்போல என் துயருக்கும் அமைதியின்மைக்கும் நிலந்தொடுத்து வானம் ஈறாக அளவு கூற முடியாது. எப்படி நான் அமைதியாக இருக்க முடியும் - ஆறுதலைப் பெற இயலும்?

தந்தை: என்றென்றும்நன்றி செலுத்தவேண்டிய தெய்வம். நான் இத்தகைய அறிவாற்றல் அழகமைப்பு செயல் நலம் ஆகியவற்றின் சொந்தக்காரியாயிருப்பதற்குக் காரணமாகிய முதல் வித்து. அதன் காரணமாக உருவானேனென்று விஞ்ஞானமும் தன்னறிவும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அவருக்கு மகளாகப் பெற்றெடுக்கப்பட்டேனென்று கூறிப் பெருமைப்படவேண்டிய நான், இவருக்கேன் மகளாகப் பிறந்தேனென்று எண்ணி வருந்திக் கொண்டிருக்கிறேன். சற்றே பெற்றுவிட்ட வளர்ச்சியின் காரணத்தால்பெற்றுவளர்த்தவர்களைப் பேயர்கள்-பேடிகள்-பேதைகளெனக் கருதும் பெண்டிர்கள் உண்டு. அவர்களின் வரிசையிலே சேர்ந்துவிட்டவளல்ல நான். பெற்றோரைப் போற்றுகிறேன் - ஆனால் அவரால் வருகின்ற பேரிழிவான நிலைகளைக் கருதி வருந்துகிறேன்.

அவர் உத்தம குணம் படைத்தவர்தான்-சத்தியசீலர்தான் என்றாலும் பழக்கத்தின்காரணமாகக் கொண்டுவிட்ட தீய வழக்கத்தைக் கையாளுகிறார். ஓயாது குடிப்பதும்-குடித்து வெறித்த நேரத்தில் அந்தத் தருணத்தில் ஏற்படுகின்ற நினைவின்வழி தான் செய்கின்ற செயல்களுக்கெல்லாம், தாம் தலைசாய்ப்பது மட்டுமன்றிப் பிறரும் தன்னைச் சார்ந்து வர வேண்டுமென்று எண்ணுகிறார் -வலிந்து அழைத்துப் பிடிவாதம் செய்கிறார், அது எவ்வாறு சாத்தியப்படும் என்பதை எண்ணத்தகுந்த மதியை அவர் இழந்திருக்கும் காரணத்தால். அவர் செயலில் படிந்துள்ள வேடிக்கை, மற்றவர்களின் வகையில் பெரும் வேதனையாய்விடுகிறது. அவைகளிலிருந்து விடுபட்டு ஓரளவு அமைதியுடன்தான் இந்தஆசிரியப் பணியைச் செய்து வருகிறேன். என் வகுப்பில் பயில வரும் சிறார்களை என் மதலைகளெனவே கருதி அவர்களுக்கு ஆற்றும் பணியை இன்பமெனக் கொள்கிறேன். பெரு வெள்ளத்திலே நீந்திச் செல்லுபவன் அயர்வுற்ற நேரத்தில் கைகால் அசைவற்று மிதந்து செல்கின்ற வேளையில்-தண்ணீரின் போக்கிலே செல்வதிலும் கரையை அண்மிச் செல்கிறோம் என்கின்ற ஆறுதல் பெறுவதுபோல், பல வேறு துன்பச் சுழல்களில் அடிக்கடி பட்டு

சுழன்றுகொண்டிருக்கும் நான், அமைதியும் ஆறுதலும் பெறத்தக்க ஒரே இடம் இந்தப் பள்ளிமனைதான். தொல்லைகளை ஏற்கின்ற நேரத்தில் நான்மட்டுமே அனுபவித்து அயர்வு கொள்ள வேண்டியிருப்பதால்-வெளிச்சென்று துன்பத்தை விலை தந்து பெறுவானேன் என்பதால் வெளியே செல்வதுமில்லை. விடுமுறைக் காலங்களைக்கூட இங்கேயேதான் கழித்துவருகிறேன். அன்னையின் ஆசையும், தம்பி தங்கையரின் தேட்டமும் அழைப்பாக உருப்பெற்றுவரும். அவைகளுங்கூட, சிலநாட்கள்வரை என்னை வாட்டத்திற் கிலக்காக்கிக் கொண்டிருந்தன. இப்போது அவை எனக்கு வாடிக்கையாய் போய்விட்டது. இதனுல் தாய் தந்தையர் உடன்பிறந்தாரை வெறுத்துவிட்டேன் என்பதல்ல! எனக்கும் தாய், தம்பி, தங்கையரைக் காணவேண்டுமென்ற துடிப்பும் தேட்டமும் உண்டு! ஆனுல் வீட்டுக்குச் சென்ருல் தந்தையார் என் வருகை எதிர்நோக்கித் தயார் செய்து வைத்திருக்கும் புதுத் தொல்லைக்குத் தலைகொடுக்க வேண்டியிருக்குமே என்பதற்காகத்தான் செல்வதில்லை! பிறந்தேன் — வளர்க்கப்பெற்றேன்-வளர்ந்தேன் - கற்றேன்-தேர்ந்தேன்-பருவப் பெண்ணுய் விட்டேன் என்பதுடன் என் வாழ்க்கைத் தொடர்கதையின் இறுதி அத்தியாயம் முற்றுப் பெற்றுவிட்டது என்கின்ற நினைவுடன்தான் இருக்கிறேன். இதை எனக்கு வளர்ச்சியுறச் செய்தவர் என் தந்தை!

நாங்கள் சிறந்த மேங்குடியினரல்ல! நடுத்தர வாழ்க்கையில் வாழ்ந்து வருபவர்கள்தான். மூத்த பெண்ணுன என்னையடுத்து தங்கையும் தம்பியருமாக நால்வர் உள்ளனர். என் தந்தையும், சீரும் சிறப்பும் குறையாதவாறு எங்களைப் பேணி வளர்த்தார். இடையே எவ்வாருே பழகிக் கொண்ட குடிப்பழக்கத்தின் காரணமாகக் குடும்பத்தின் நிலையை அறவே மறந்து விடுகிருர். குடிக்கப் பணமில்லாதபோது ஆள் தேடும் படலத்திற்கு ஆரம்ப விழாச் செய்வார். அப்போது எதிர்ப்படுபவன்-அவர் ஆவலைப் பூர்த்தி செய்பவன் யாராக இருந்தாலும், அவன் சில மணி நேரங்கள் என்னை அகக்கற்பனை செய்து பார்க்க வேண்டியவனுய் விடுவான். அத்துடன் நிற்காது. நாட்செல்லச் செல்ல சில நூறுகள் அவனிடம் வாங்கப் பெறும். அந்த நூறுகள் பல வேறு தகராறுகளைத் துவக்கி வைக்கும். அதுவரை, அவனுக்கே என்னை மண முடித்து வைப்பதாகக் கூறியிருந்த என் தந்தையின் சொல் பொருளுண்மையை அவன் அதற்குமேல்தான் ஆராயப்புகுவான். அதன் முடிவு அவன் எனக்கெழுதும் ஒரு கடிதத்துடன் நிற்கும். இவ்வாறு பல சமயங்களில் என் பள்ளிக்கு வந்த கடிதங்களில் ஆண்களின் முகவரி குறிப்பிட்டிருப்பதை முன்னிட்டு, பள்ளியிலே பலவேறு பூசல்களும் நேர்ந்ததுண்டு, அது தொடக்ககாலம்! எனக்கு வருகின்ற கடிதங்களைக்கொண்டு புதுக் கதையொன்று புனைந்து அதனையே தங்கள் பொழுது போக்காகக் கொண்டு எனக்குத் தொல்லை தந்தவர்கள் பலர். அவற்றிற்குத் தலைமை தாங்கியவளே இப்போது என் நலத்தில் நாட்டமும் வளர்ச்சியில் கருத்தும் கொண்டவளாக இருக்கிருள். அவளெல்லாம் என்றேனும் ஒரு நாள் திருந்துவாளென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவ்வாறு கொண்ட என் நம்பிக்கை பாழாகாதது கண்டு இன்று பூரிப்புக்கொள்வதும் உண்டு. இது போன்ற குழப்பங்களுக்கும் தப்பு எண்ணங்களுக்கும் காரணமாயிருந்தது என் தந்தையின் செயல் முறைகள் தான் என்பதை எண்ணி வேதனைப் படாமலிருக்க முடியவில்லை. இவைபோல் வனபல!

இவ்வாறு அவர் கடன்படுவதும் அதற்குப் பலியாக வீட்டிலிருக்கும் பொருள்களை விற்றுக் கொடுப்பதும் என் தாயாரின் வேலை! அவர்களால்தான் என் தந்தையின் செயல் வளர்ச்சிபெற்று வந்தது என்ருல் அது மிகையாகாது, இதேபோல ஒரு சமயம் கடன் கிடைக்காத காரணத்தாலோ என்னவோ அவர் அலுவல் பார்த்துவரும் பள்ளியின் பணத்தைச் செலவு செய்துவிட்டார். சட்டத்தின் படி அதற்குக் கையாடல் என்றல்லவா பெயரிடப்படும். அதன் பயனுல் சிறைத் தண்டனை கூடப் பெற நேர்ந்தது. அப்பப்பா! அன்றைய வழக்கு மன்ற நிகழ்ச்சிகளை நினைத்துக் கொண்டாலே என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. அவரது தண்டனைக் குறைப்பிற்குக் காரணமாயிருந்த ஒரு சிலர் அவரது சீலம் பற்றிக் கூறுகின்றபோது சிந்தை குளிர்ந்ததுதான். தந்தை வழக்கு மன்றத்தில் நன்னடத்தையுள்ளவரென்று கூறப்படுகிருர் என்பதாலல்ல! அவரது வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு விடுமென்ற ஒரு சபலம் ஏற்பட்டதால். எத்துணை சாட்சியங்களிருந்த போதிலும், கையாடலென்ற ஒரு சொல் அவர் தண்டனை பெற்றே ஆகவேண்டுமென்ற நியதியை ஏற்படுத்திவிட்டது. அன்றைய நிகழ்ச்சி அகலாது என் உள்ளத்திலே அப்படியே பதிந்து விட்டது. தீர்ப்புக் கூறப்பட்ட அந்த நேரத்தில் கைதிக் கூண்டிலே தந்தை-இரு புறமும் காவல் சூழ "பெருவாரியான பணத்தைச் செலவு செய்து குற்றங் கண்டு பிடிக்கக் கற்றுத் தேர்ந்து" வந்திருக்கும் திறமைகொண்டோர் - பணத்தின் காரணத்தாலேயே சிறையேற்க நிற்பவரை பார்த்துத் துடித்து நிற்கும் காங்கள்.

இவையெல்லாம் எங்கோ நாவலில் படித்ததுபோல நிகழ்ந்தாலும் என் நினைவை விட்டு மாறவில்லை. இதைப் பலமுறை என் தந்தைக்கு நினைவு படுத்தினேன். அவர் தன்னினைவுடன் இருந்தாலல்லவா? இவ்வாறு கடன் பட்டு-கடன் பட்டு குடும்பம் கரைந்தது. என் உள்ளத்தில் துன்பம் நிறைந்தது. இப்போதும் யார் என்ன எழுதப்போகிருர்களோ தெரியவில்லை. ஒரு நல்லவர் எனக்கு எழுதியிருந்தார்;

"உன் உருவப் படத்தைப் பார்த்தேன். எழில் தவழும் முகம்-எள்ளத்தனையும் சலனமற்ற பார்வை இவை என்னை ஊடுருவிப்பாய்ந்தது. உன் தந்தையின் அனுமதியும் ஒத்துழைப்பும் கிடைத்து விட்டது! இதோ என் உருவப்படத்தை அனுப்பியுள்ளேன். பார்த்து உன் சம்மதம் தருவாயெனக் கேட்டுக் கொள்கிறேன்"

என எழுதியிருந்தார். இவர் நல்லவரெனக் குறிப்பிடக் காரணம், "என் சம்மதம்" என்ற ஒன்றை எதிர் பார்க்கும் இதயம் படைத்தவராதலால். இதுவரை என் தந்தையால் கூறப்பட்ட ஒன்றைக் கொண்டே

# தமிழ்ச்சுவை!

"ரவி"

★

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

—குற

அந்திநல் வானில் மலரும்—எழில்
அமைந்த இயற்கையின் வண்ணம்
சந்திரன் சிந்தும் ஒளியில்—புவி
தங்கத் தகடென மின்னும்
சிந்தனை யள்ளும் அழகால்—கவி
சிந்திடும் ஓவியப் பெண்ணும்
சிந்தை கவர்ந்திடும் அறிவாய்—எனில்
உணர்வைக் கவரும் தமிழே!

வீணை தெறித்திடும் பண்ணும்—உயர்
வேய்ங்குழல் மீட்டும் இசையும்
தேனைப் பருகிட வண்டு—கவி
பாடும் இனிய சுவையும்
வானிடை நீந்திடச் செய்யும்—சுரம்
வகுத்திடும் மெல்லிசைத் தாளம்
தேனுய் இனித்திடும் கேட்டால்—எனில்
தெவிட்டா தினிக்கும் தமிழே!

ஆவின் நறும்பா லொடுதேன்—சுவை
அள்ளக் கலந்ததைக் காய்ச்சி
பாவினம் போற்றும் பலவின்—சுளைப்
பாங்குடன் மாங்கனிச் சாற்றை
மேவும் வகையினிற் கூட்டி—இம்
மேதினி உண்ணக் கொடுத்தால்
நாவில் இனிக்கும் அறிவோம்—எனில்
நவில இனிக்கும் தமிழே!

சண்பகம் முல்லை மருவும்—கமழ்
சாமந் தியுடனே ரோஜா
விண்ணரும் சூரியத் தாமரை—ஒளி
விளங்கும் நிலவுக் குமுதம்
தன்னகம் தேய்ந்தே உலகில்—மணம்
தந்திடும் சந்தணம் மல்லிகை
இன்னவை நன்ரும் நுகர்ந்தால்—எனில்
எண்ண இனிக்கும் தமிழே!

பொதிகை தன்னைத் தழுவி—நற்
பூங்கொடி நன்மணம் ஏந்திப்
புதுமைச் சுவையை அணைத்துத்—தண்
பொங்கும் அருவியில் மூழ்கி
வதுவை மனைவிநம் உள்ளம்—தொடும்
வண்ணம் தவழ்ந்திடுந் தென்றல்
புதுமை பிணைத்திடும் உளத்தே—எனில்
புத்துணர் வூட்டும் தமிழே!

கண்கவர் நல்லெழில் தோற்றம்—நா
இனிக்கும் இதழின் சுவையாள்
பண்சேர் சுவைச்சொல் கொண்டாள்—இளம்
பனிமலர் மேனி மணத்தாள்
பின்னிப் பிணைந்தே அணைவாள்—அன்
பிசைந்த உளத்தால் உடலால்
இன்பினை மீட்டும் மனையாள்—எனில்
இன்னுயிர் மீட்டுந் தமிழே!

**A. E. M. I.**
எலக்ட்ரிக் மோட்டார்கள்
**D. P. F.** பம்புகள்
தேவைக்கு எழுதவும்:
M. மார்க்கபந்து.
K. V. குப்பம் (வ. ஆ.)

என்னை மனைவியாகக் கற்பனை செய்து கொண்டவர்கள் மட்டுமல்ல, ஆண்டு பல கடந்து அறுபதாவதாண்டு நிறைவு விழா நிகழ்ச்சிவரை கற்பனை செய்தவர்கள் தான் அனைவரும். ஆகவே இந்த நல்லவருக்கு என் நிலையையும் நிகழ்ச்சியையும் குறித்துஎழுதினேன். அவர் கோபிப்பார் குமுறுவார் சற்ற முற்றுத் திட்டி எழுதுவாரென்றே எதிர் பார்த்தேன். ஆனால் அவரோ என்னை மன்னிப்புக்கோரி மறு கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையிலே நான் பெறுகின்ற இரண்டுங் கெட்ட தன்மைகளால் மக்களின் பலவேறுபட்ட மனப்பான்மைகளைக் கண்டறிகிறேன் அனுபவிக்கிறேன். என் வரையில் வாழ்க்கையென்பதே இல்லை யென்ற ஒரு முடிவுக்கு வந்துவிட்ட காரணத்தால்- ஆடவருக்கு அடிமையாக வாழும்நிலை எனக்கில்லை என்கின்ற முடிவைக் கொண்டுவிட்டதால் மாதர் தம்மைஇழிவுபடுத்தவும்-மாதர் வாழ்வில் ஆடவர் கொடுஞ்செயலே மேம்பட்டு வருவதால் ஏற்படுகின்ற அவலநிலையும் போகவேண்டுமென்ற முறையிலே பணியாற்றத் தொடங்கினேன்.

மாலையிலே சோலையிலே தனித்துவரும் மாதரினத்தை, ஆடவரில் இளையோர்முதியோரென்கின்ற பாகுபாடுகூற இயலாத் தன்மையில் மெல்லச் சிரித்தும்-ஆசைச் சொற்களை அள்ளித்தெளித்தும்-தம் வாழ்வின் மனப்போக்கில் காலங் கடத்திக் களிப்பெய்தி இள மாதர் வாழ்விலே தலைதூக்க வகைகெட்டுப் போமாறு செயலாற்றிச் சீர்கெடுக்கும் செயல் முறைகள் மாறுபடப் பணி புரிந்தேன்,

என்வரையில் மட்டுமன்றி என் உடனுறை பணியாளர்தம் வகையிலும் தலையிட்டு, அவர் செயலில் தடங்கெட்டு மடு வீழப் போகின்றபோதங்கே வழிமறுத்து அவர்கள் விழி திறக்க வகைகொடுத்துக்கடை கெட்டுப் போகும் முறை நீக்குதற்குத் துணையாய் நின்றேன்.

இரக்கத்தை எள்ளின் மூக்கத்தனையும் கொள்ள மறந்த இளைஞரினம் இனிப்பாகப்பேசுவதும்-ஏந்திழையே என் வாழ்வின் துணை இனி நீயன்றி வேறிலையே என அவள் இதயங் குளிரும் வண்ணம் பிதற்றுவதும்-பின் தமது இச்சையெலாம் தீர்ந்தபின்னர் எண்ணுமல் பேசி இழித்துப் பழிக்கின்ற வரலாற்று வழிவழி ஏடுகளில் தவறாது முற்றுப்புள்ளியிட்டு முற்றிற்று-முற்றிற்று எனக் கோடிட்டு இனி எங்கள் வாழ்வு எட்டிக்காயல்ல-இனிக்கும் தேம்பாகு என மாதர் எக்களித்துக் கூறுகின்ற வகை செய்ய முனைந்தேன் - வெற்றி காண்கின்றேன். இதனால் என்னையே பழிதீர்க்க எண்ணினோர் பலருண்டு. அவர்மீது இம்மியும் சினங்காட்டினேனில்லை! முதலில் அவர்கள் தொடங்குகின்ற அழைப்புமுறை-ஆதரவுச்சொல்- இன்பமொழி இவையெல்லாம் எரிமலை-சுடுகாடு-பாலைவனங்களாகமாறிக் காட்சி தருகின்றபோது,உலகம் நிலையாமையைப்பற்றிப் பாடியவர்கள்-எதிலும் நிலையாத இளைஞர்களைப் பாடிப் போனரில்லையே என்றெண்ணி வருந்துவேன். இவ்வாறு என் காலங் கடந்து வருகின்ற தென்றாலும் பலருக்கு பல வகைகளில் உறுதுணையாயிருந்து உதவி வருகிறேனென்றாலும் - என்னை இகழ்ந்தாரும் போற்றிப் பரிவு கொள்ளத் தகுந்த அளவு அவர்கள் இதயப் போக்கை மாற்றும் வன்மை படைத்திருக்கிறேனென்றாலும் என் தந்தையை....

என்றெண்ணும்போது திருந்தாத மனிதர்-தீராத நோயினர் மாற்றியமைக்க முடியாத மலை போன்றது அவரது மனப்போக்கு என்பதை எண்ணுகின்றேன் - இடிவிழுந்த வைக்கோல் போராகி விடுகிறேன். ஆனாலும் ஒன்றை எண்ணி அமைதி கொள்கிறேன். என் போலும் ஏந்திழையர் இருப்பாரேல் அவருக்கு இந்த நிலை வாராமல் எடுத்துக்கூற-தடுத்துச்சொல்ல-இதஞ் செய்ய ஒரு வழிகிடைத்திருக்கிறதே என்ற பெரு மகிழ்வுதான்.

இதன் மூலம் விளைகின்ற பயனென்று நான் எதிர் பார்ப்பதெல்லாம், நாட்டிலே முன்னேற்றம் பரவி வருகிறது, அடிமை விலங்குகள் அறுத்தெறியப் பட்ட வரலாறுகள் பேசப்பட்டு தீட்டப்பட்டு விளக்க மேற்பட்டு வருகிறது. இந்நாளிலும் பெண்ணடிமை கொள்ளுகின்ற பேதமையும்- பெண் பெற்றார் பெண் விற்கத் துணிகின்ற இழிதகைமையும் இல்லாது போகாதோ? அய்யய்யோ! நினைத்தால் நாணம்- சொன்னால் இழிவு. பருவத்தை எய்திவிட்ட பெண்ணோ ஆணோ இருந்து விட்டால், இறைச்சி மணம் தென்பட்டுச் சிறகடித்து செல்கின்ற பருந்துக் கூட்டம் போல வழி நடந்தும் வண்டியேறியும் கடல் கடந்தும் காற்று வெளியிலே பறந்தும் செல்லுகின்ற வகைகள் தான் எத்தனை எத்தனை. அவரெல்லாம் பெண் மனமும்-தங்கள் மக்களின் மனநிலையும்அறிந்தா செயல் படுத்தச் செல்கின்றார்? இல்லை இல்லை! சீருக்கும் சிறப்புக்கும் விற்கவும் கொள்ளவும் விலைப் பொருளாய் தம்மகவின் வினை முடிக்க அல்லவோ செல்லுகின்றார். வீட்டுக்கும்மாட்டுக்கும் விலைபோகாப் பொருளுக்கும் தக்கவிதம் பேசித் தம் பொருளைக் கைசேர்க்கும் தரகர் வேண்டும். இங்கே விலை மதிக்க வொண்ணாத மாணிக்கங்கள்-இருந்த இடம் பளிச்சிடும் வைரக் குவியல்கள் இவற்றிற் கல்லவா தரகர்கள் திரிகின்றார்கள்! இந்தக் கொடிய நிலை தீய வேண்டும் என்பதுவே என் பேரவா?

இதனை நான் எண்ணி, என் எண்ணங்கள் செயலாகும் நாளெண்ணிக் கொண்டிருப்பதால் பயனில்லை. பிறந்த நாட்டின் பெருமை குன்றாது பேணி வளர்க்கின்ற கடமை ஆடவர் பெண்டிர் இருபாலரின் உடமையாகும்! கொள்கின்ற எண்ணத்திற்கும் - எண்ணத்தைச் செயலாற்றும் தகைமைக்கும் திறமையோடு உள்ள உரமும் வேண்டும்! காதலுக்கு எடுத்துக் காட்டாய் இலக்கியத்துக் காட்சிகளையும் வரலாற்றுடன் இணைந்து வரும் காதல் நிகழ்ச்சிகளையும் கூறித் தங்கள் காதலுக்கு வித்திட்டு வளர்க்கின்றனர். ஆனால் இலக்கியக் காதலுக்கும் வரலாற்றுக் காதலுக்கும் மிடையே புதைந்து கிடக்கும் பல உண்மைகளை மறந்து விடுகின்றனர்.

இலக்கியங்களிலே ஏற்படுகின்ற காதல் வகைகளில், பருவம் சூழல்கள் ஆகியவற்றால் நேர்கின்ற காதல் எழுச்சிக்கு மறுபபும் எதிர்ப்பும் தோன்றியக்கால் உடம்போக்கு முறையாலே காதலர்கள் சென்ற வரலாற்றைக் காண்கிறோம்.

“இன்னவளை நான் மணம் புரிய இசையீராயின் எத்துணை இழிவையும் ஏற்றுநிற்கும் என் நிலை கண்டு இன்புற்றிருப்பீர்” என்கின்ற வாறு மடலூர் காட்சிகள் நம் முன்னே அசையா ஓவியமாக நிலை நிற்கின்றன!

ஆனால் இலக்கியத்தின் வளங்காட்டி வடிவுடையாளை வரவேற்கும் வாலிபர்கள் உடம் போக்கா போகின்றனர். தனக்கென ஒரு தனித் தகைமை கிடைப்பதாயின், அது வரை ஆருயிரே அன்னமே அணங்கினத்தின் அரசியே என்று அன்பொழுகப் பேசிக் கூடி வந்த அமுதனையாளை உயிர் கொல்லும் கூற்றே உதவாக் கரையே-கண்ணிற் பட்டாலும் களங்கந்தரு கடுநஞ்சே என்றல்லவா பேசுகிறார்கள்-கை விட்டோடக் கங்கணம் கட்டிக் கொள்கிறார்கள்,

மடலூர்ந்தார் இலக்கியத்துக் காதலர்களென்னில் மடலெழுதிக் காதலுக்கு மரண விதி அறிவித்து மற்றொருவள் மடி மீது தலையிருத்தி மகிழ்வு கொள்ளவல்லவா துடிக்கின்றார்! எனவே இவர்களெல்லாம் இலக்கியத்துக் காட்சிகளை இயம்பு புதற்கே தரமற்ற இழிமதியர்.

வரலாற்றுக் காட்சிகளில் வருகின்ற காதலரை, நம் நாடு அந்நிய நாடு என்கின்ற பாகுபாடுகூட அறியமுடியாதவகையில் கூறுவார்கள். காதலுக்கு உள்ளத்தை ஒப்படைத்து விட்ட ஒண்டொடியர் அதனையும் ஒரு மகிழ்ச்சிச் செய்தியாகவே கேட்டு இன்புறுவர்! லைலாவும் மஜ்னுவும்-ரோமியோவும் ஜுலியட்டும்-அம்பிகாபதியும் அமராவதியும்-அனார்கலியும் சலீமும்தான் பெருவாரியான காதலர்க்கு எடுத்துக் காட்டும் இலக்கணங்களாகக் கிடைக்கின்றனர். இவர்களின் காதல் உயர்வைப் பேசி மகிழும் காதலர்கள் அவர்களின்காதல் புதை குழியிலே-மரண மேடையிலேதான் நிறைவேறியதென்பதை மறந்துவிடுகின்றனர். முதலிலே கூறப்படும்போதே நம்நிலையும் அதுதானோ என்று கேட்காது விட்டுவிடுகின்றனர். அவர்கள் காதலும், காதலிலக்கணமாய் கூறப்பட்டவர்களின் காதல் போலவே உயர்வு தாழ்வு-இன வேறுபாடு - ஆள்வோன்ஆளப்படுவோன் என்ற மனப்பான்மை-சாதி இடையீடு இவற்றிற்குப் பலியாக்கப்படுகிறது. யாரோ—எங்கோ ஒரு சிலர் வெற்றி பெறுகிறார்களென்றால் அது விதிவிலக்கே தவிர பெரும்பான்மையினர் இந்தத் தன்மையினராகவே தான் இருக்கின்றனர். என் வரையில் நான் கண்ட அத்தகைய நிகழ்ச்சிகள் ஏராளம் ஏராளம்.

ஆகவே இனியேனும் பெண் குலத்தைப் பெண்குலம் காக்க முந்துறட்டும். தன் இனத்திலேயே ஒருத்தியைக் காதலித்து அவளைக் கைவிட்டுத் தன்னை மகிழ்விக்கக் கடிமணம் புரியவரும் காளையர்களைக் கண்டிக்கப் பெண்ணினம் முனையட்டும். பணத்துக்குப் பெண்ணை விலைபேசி விற்கின்ற கொடுமை பொடிப் பொடியாகட்டும்.இந்த நிலைக்கு என்னைப்போன்ற வேதனையை அடைந்தோர் நிச்சயம் வரக்கூடும்! ஆனால் நான் கொள்கின்ற முடிவுக்குப்பெண்டிரினம் வரவேண்டுமென்று விரும்புகின்றேனே யல்லாமல் நான் பட்ட தொல்லையும் அல்லலும் பெறவேண்டுமென்று நான் கருதவில்லை.

அந்த நாள் என்றுவருமோ! அன்றே இந்த நாட்டின் மடமை - மிடிமை-கொடுமைகள் அகலும். அந்நாளேனன்னாள் பொன்னாள்-இந்நாட்டுப் பெண்ணினத்தாரனைவருக்கும் இன்ப நாள் என்பதை எந்தப் பெண் மனமும் எண்ணிப் பூரிப்பு கொள்ளாமல் இருக்க முடியாது.

இலக்கியம்

# இளையோளின் இனிய மொழி!

★ இரா.நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

அந்நங்கையும் அந்நம்பியும் திருமணம் செய்துகொண்டு இல்லற இன்பத்தில் இனிது திளைத்து வருகின்றனர்.

காதலன் போர்படைத் தலைவன் ஆதலாலும், காதலனும் காதலியும் செல்வக்குடியிற்றேன்றியவர்களாதலாலும் வாட்டமின்றி, வருத்தமின்றி அவர்களது இல்லற வாழ்வு ஈடேறி வருகிறது அவர்களது இல்லற மகிழ்ச்சிக்கு மேலும் ஊட்டம் அளிக்கும் வகையில், தலைவி ஓராண்டில் ஆண்மகவு ஒன்றை ஈன்றெடுக்கிருள். மகன் பிறந்துள்ளது தலைவிக்கும், தலைவனுக்கும், பெற்றேருர்க்கும், ஏவலாளர்க்கும், மாளிகையிலுள்ள ஏனையோர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. மகனுக்குப் பெயரிடுவிழா மிக்க ஆடம்பரத்தோடும், ஆரவாரத்தோடும் கொண்டாடுகிருர்கள்.

தலைவனும் தலைவியும் மகனை ஆடை அணிகலன்களால் அழகு படுத்திப் பார்ப்பதும், அவனை வாரி அணைத்துக் கொள்வதும், உச்சிமோந்து முத்தமிட்டு மகிழ்வதும், சீராட்டிப் பாராட்டித் தாலாட்டிப் பூரிப்பதும் ஆகக் காலங் கடத்தி வருகின்றனர்.

குழந்தை தாய் தந்தையரின் முகம் பார்த்து மகிழ்வதும், அவர்கள் கொஞ்சக் கொஞ்சக் கைகால்களை உதைத்துக் கொண்டு சிரிப்பொலி காட்டுவதும், குப்புறக் கவிழ்ந்து படுக்க முயல்வதும், கையிலகப்பட்டதை வாயில் வைத்துச் சுவைத்து மகிழுமுற்படுவதும் ஆன பச்சைக் குழந்தையின் செயல்கள்கண்டு இருவரும் உளம் பூரித்துப் போகின்றனர்.

இப்படியாக அவர்களது இல்லறம் இனிமையாக நடந்து கொண்டிருக்கும்போது, பகைகாட்டுடன் போர் தொடுக்கும்படி அரசன் பறைசாற்றுகிருன். போர் வீரர்களெல்லாம் வாளையும், வில்லையும், வேலையும், கேடயத்தையும் புதுப்பித்துக்கொண்டு சாரை சாரையாகப் பாசறையில்வந்து குழுமுகிருர்கள். போர்ப்படையை நடத்திச்செல்ல வேண்டிய பொறுப்பு படைத் தலைவனைச் சார்ந்ததாகிறது. எனவே போரணி பூண்டு புறப்பட வேண்டிய நெருக்கடி நிலை தலைவனுக்கு ஏற்படுகிறது. அழகிய தன் இளங் காதலியையும், அன்பும் அருமையும் மிக்க தன் பச்சிளங் குழந்தையையும் விட்டுவிட்டு எப்படிப் பகைப்புலம்போவது என்பதை எண்ணி மனக் கலக்கங்கொள்கிருன். வீட்டுப் பணியைவிட நாட்டுப்பணியை நிறைவேற்றுவது தன் இன்றியமையாக் கடமையாகும் என்பதை உணர்ந்து, போருக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்கிருன்.

தலைவன், தன்னைவிட்டு அகலப் போகிருன் என்பதை அறிந்த தலைவி மிக்க வாட்டமும் வருத்தமுங்கொள்கிருள். அவளும் மறக்குடி பிறந்த மகளாதலால், தன் காதலனைத் தடுத்து நிறுத்துவது தன் குடிக்கேற்ற பண்பு ஆகாது என்று கருதித் தன்னைத் தானே ஒருவாறு தேற்றிக் கொள்கிருள்.

தலைவன் பட்டுடை அணிந்து, கேடயத்தைத் தோளிலும், வாளை இடுப்பிலும் ஏந்திப் பாசறை நோக்கிப் புறப்பட ஆயத்தமாகிருன். தன் அன்புக் காதலியிடம் விடை பெற்றுக்கொள்ள முன் வருகிருன். தலைவி குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு விடை கொடுத்தனுப்ப அவனை நோக்கி வருகிருள். குழந்தை தந்தையைக் கண்டதும் கை கால்களை உதறிக்கொண்டு தாவ முயல்கிறது. தலைவன் தன் இருகைகளாலும் அருமை மகனை வாரி எடுத்து அணைத்துக்கொண்டு முத்தமிட்டு மகிழ்கிருன். தன் அன்புக் காதலன் தன்னை விட்டுப் பிரிந்து போகப் போகிருனே என்றுஎண்ணியவுடன் அவளையறியாமலேயே அவளது கண்களில் நீர்வழியத் தொடங்குகிறது. அவன் குழந்தையை அவள் கையில் கொடுத்து விட்டு, அவளை அணைத்துக் கொண்டு "ஏன் அழுகிருய்? நான் எப்படியும் கார் காலம் துவங்குவதற்குமுன் வந்து விடுகிறேன்! நீ ஏன் அஞ்ச வேண்டும், அழவேண்டும்?" என்று கேட்கிருன்.

அதற்கு அவள் "ஒன்றுமில்லை! போய்வாருங்கள் அத்தான்!" என்கிருள்.

தலைவன் அவளது கண்ணீரைத் தன் கையால் துடைத்து விட்டு முத்தமழை பொழிகிருன். அவள் புன்முறுவல் பூக்கிருள். பிறகு தலைவன் மாளிகையிலிருந்து ஓடோடி வந்து தேரின்மீது தாவி ஏறி, மிக விரைவாகப் பாசறை நோக்கிப் புறப்படுகிருன்.

படைத்தலைவனுன காதலன் நால்வகைப் படைகளுடன் பகைப்புலம் போகிருன். இரு தரப்புப்படைகளும் ஒன்றையொன்று மோதுகின்றன. கடுந்தாக்குதல்கள் நடைபெறுகின்றன. தேர்கள் முறிந்து சடசடவென விழுகின்றன; யானைகள் உறுப்புக்கள் இழந்து சாய்கினறன; குதிரைகள் இறந்து சாய்கின்றன; மண்டைகள் சிதறக், குருதி ஆறு ஓடப், பிணமலைகள் குவிகின்றன; எங்குபார்த்தாலும் செந்தூள் பறக்கின்றது, போர் தொடர்ந்து பல நாட்கள் நடைபெறுகின்றன. கார் காலம் நெருங்க நெருங்கப் போர் மிகக் கடுமையாக ஆகிறது. இறுதியில் பகைப் படைகளையெல்லாம் முறியடித்து, வெற்றி கொண்டு, வாகை சூடுகிருன் நமது படைத் தலைவன்.

போர் நிற்பதற்கும் கார்காலம் துவங்குவதற்கும் சரியாக இருக்கிறது. படைத்தலைவன் போர் வீரர்களுடன் பாடி வீட்டில் தங்கியிருக்கும் அரசனைப்போய்ப் பார்க்கிருன். அரசன் போர் வீரர்களுக்கும், படைத் தலைவனுக்கும் முறைப்படி வழங்கவேண்டிய விருதுகளையும், பரிசுகளையும் நல்குகிருன். போர் வீரர்கள் விடை பெற்றுக்கொண்டு புறப்படுகிருர்கள். இறுதியாகப் படைத் தலைவனும் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்புகிருன்.

அரசனுல் வழங்கப்பட்ட சிறந்த குதிரை பூட்டப்பட்ட தேரில் படைத்தலைவன் ஏறி அமர்கிருன். தேர் புறப்படுகிறது. குதிரை நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்து தேரை இழுத்துச் செல்கிறது.

தலைவன் தலைவியைப் பற்றியும், மகனைப் பற்றியும் பலவாருக நினைவு படுத்திக்கொண் பேராவலோடும், பெருமகிழ்சியோடும் செல்லுகிருன். போகும் வழியில் இரு மருங்கும் உற்றுப் பார்க்கும்போ கார்காலம் பிறந்து விட்ட அவன் கண்ணுக்குப் படுகிறது. கார்க்கணங் கொடிகளும், ... தள் செடிகளும் புதர் தோறு வளர்ந்து பூத்துக் குலுங்கி கின்றன. அந்த அழகான கா சியைக் கண்டுகொண்டே செல்லுகிருன். பொற்காசுகளைத் தொங்கவிட்டா போன்ற மிக்க அழகையுடை சரக் கொன்றையின் மலர்க அதன் கிளைகளிலெல்லாம் பூத்துத் தொங்குகின்றன. கார் காலத்து மலர்களின் ந மணம் காடு முழுவதும் கம கிறது. செம்மண் பரந்த முல் நிலமெல்லாம் மழை பெய் தரை நனைந்திருப்பதையு ஆங்காங்குப் பள்ளம் படுகு களில் மழை நீர் தேங்கிக் கிட பதையும் காண்கிருன். இவை யெல்லாம் கார்காலம் முன்பே வந்து விட்டது என்பதை அவ னுக்கு உணர்த்தவே, த னைத் தலைவி மிகவும் எதி பார்த்து வருந்திக் கொண்டி ருப்பாளே என்று நினைத்து இன்னும் விரைவாகச் செல்ல வேண்டுமே என்று துடிதுடிக் கிருன்.

தலைவன் தேர்ப்பாகனை விளித்துத் "தேர்ப்பாகனே தேரை இன்னும் சற்று விரை வாகச்செலுத்துவாயாக!" என் கிருன்,

"எவ்வளவு விரைவாக செலுத்த முடியுமோ அவ் ளவு விரைவாகத்தான் செலுத் துகிறேன்" என்கிருன் தேர்ப் பாகன்.

"இன்னும் சற்று முயன்று பாரேன்?"

"ஏன் அவ்வளவு விரைவு படுகிறீர்கள்?"

"நான் என் காதலியைப் போய்ப்பார்க்கவேண்டும்!"

"எப்படியும் நாளைக்குள் போய்ப்பார்க்கத்தானே போகி றீர்கள்?"

"நான் நாளை விடியற்காலை யில் என் மாளிகையில் இருக்க வேண்டும். அதற்காகத் தான் இவ்வளவு விரைவு படுத்துகி றேன்!"

"விடியற் காலையில் அங்கு என்ன சிறப்பான நிகழ்ச்சி இருக்கிறது?"

"சிறப்பான நிகழ்ச்சி மட்டு மல்ல என் மனதிற்கு மகிழ்ச்சி யூட்டும் காட்சியும் நிகழ்ச்சியும் நடைபெற இருக்கின்றன!"

"என்ன அப்படிப்பட்ட காட்சி?"

"என் காதலியும் என் அரு மைக் குழந்தையும் ஒளி ... ஆடை அணிகலன் ... கொண்டு அழகு படுத்தப்பட் டிருக்கும் என் மாளிகையில் நடமாடும் காட்சி ... கண் கொள்ளாக் காட்சியாகும்!

அதைக் காணவே துடிக்கிறேன்!''

" அந்தக் காட்சியை நாளைக்குள் எப்பொழுதும் பார்க்கலாமே!''

" நிகழ்ச்சி ஒன்றையும் காண வேண்டும் என்று கூறினேனே அது விடியற்காலையில் நடைபெற இருக்கிறது!''

" என்ன அந்த நிகழ்ச்சி?''

" நடந்தறியாத சிறிய அடிகளையும், பூப்போன்ற கண்ணையும் உடைய என் அருமை மகன் தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பான். அப்பொழுது என் அன்புக் காதலி அவளது உடலெல்லாம் துவள அவ்வளவு மென்மையாகவும், அன்பாகவும் அவனை நெருங்கி "என் அம்மாவே! வா!'' என்று இனிமையாக அழைப்பாள். அப்படி அழைக்கின்ற அழகிய இனிய மொழியை நான் கேட்டு மகிழ விரும்புகிறேன்!''

" அப்படியா? இதோ விரட்டுகிறேன் தேரை விரைவாக!'' என்று கூறித் தேர்ப்பாகன் குதிரையைச் சாட்டையால் அடித்து விரட்டு விரட்டு என்று விரட்டுகிறான்.

இளமையும், அழகும் பொருந்திய தலைவி, தலைவனில்லாத காலத்திலும், வீட்டிற்கு வந்த விருந்தினரை வரவேற்று, விருந்திட்டு, வழியனுப்புதல் போன்ற இல்லறச் செயல்களை இனிது நிறைவேற்றி வருகிறாள்.

தலைவன் விரும்பிய வண்ணம், தேர் விடியற் காலத்தில் மாளிகையின் முன் வந்து நிற்கிறது. தலைவன் மெல்ல இறங்கி ஓசைபடாமல் மாளிகையில் நுழைந்து கூடத்தில் வந்து நிற்கிறான். தலைவனை எதிர்பார்த்து ஆடை அணிகலன்களால் தன்னை ஒப்பனை செய்து கொண்டிருக்கும் தலைவி, தலைவன் வந்திருப்பதை அறிந்து கொள்ளாமலே எழுந்து சென்று, தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் தன் மகனை " என் அம்மாவே! வா!'' என்று அன்பு குழைய அழைக்கிறாள். அந்த இனிய மொழிகளைப் பின்னால் நின்று கேட்டு மகிழும் தலைவன் " கண்ணே!'' என்று குரல் கொடுத்துப், புன் சிரிப்பு காட்டிக், கைகளை நீட்டி நிற்கிறான். தலைவி வெடுக்கென்று திரும்பிப் பார்த்துத் தன் அருமைக் காதலன் நிற்பதை அறிந்து, பொங்கும் மகிழ்ச்சியால் தாவிச் சென்று அவனை அணைகிறாள். அவன் அவளைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு மகிழ்கிறான். பிறகு இருவரும் சேர்ந்து மகனைக் கொஞ்சி மகிழ்கிறார்கள்!

* * *

இது நற்றிணை-221 ஆம் செய்யுளின் வந்துள்ள கருத்தைத் தழுவித் தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் முல்லைத் திணையின் பாற்பட்ட "வினை முற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனுக்குச் சொல்லுவது' என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் இளவேட்டனார் என்ற புலவராவார். இவரைத் தவிர மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் எனற வேறொரு புலவரும் இருந்திருக்கிறார்.

மணிகண் டன்ன மாநிறக் கருவிளை
ஒண்பூந் தோன்றியோடு தண்புதல் அணியப்
பொன்தொடர்ந் தன்ன தகைய நன்மலர்க்
கொன்றை ஒள்ளிணர் கோடு தொறும் தூங்க
வம்புவிரித் தன்ன செப்புலப் புறவின்
நீரணிப் பெருவழி நீளிடைப் போழச்
செல்க பாகநின் செய்வினை நெடுந்தேர்
விருந்து விருப்புறாஉம் பெருந்தோள் குறுமகள்
மின்னொளிர் அவிரிழை நன்னகர் விளங்க
நடைநாள் செய்த நவிலாச் சீறடிப்
பூங்கண் புதல்வன் தூங்குவயின் ஒல்கி
வந்தீக எந்தை என்னும்
அந்தீம் கிளவி கேட்க நாமே

[நற்றிணை-221]

[பொழிப்புரை பாகனே! வரும் விருந்தினரை எதிர்கொண்டு அழைக்க விருப்பங் கொண்ட பெரிய தோளையுடைய இளமையுற்ற நம் காதலி மின்னல் போல் ஒளி விடுதலையுடைய விளங்கிய அணிகலன்களால் எமது நல்ல மாளிகையெங்கும் விளங்க, நாளின் காலைப் பொழுதில் நடத்தலைக் கற்றறியாத சிறிய அடிகளையும் பூப்போன்ற கண்ணையும் உடைய மகன் தூங்கும் இடத்திலே சென்று, உடம்பிலுள்ள துவட்சியோடு அம்மகனை நெருங்கி நோக்கி 'எந்தாய் வருக' என்று அழைக்கின்ற அழகிய இனிய சொல்லை நாம் கேட்டு மகிழும்படி நீ மணியாற் செய்து வைத்தாற் போன்ற கரிய நிறத்தை உடைய கருங்காக்கணங்கொடி ஒள்ளிய காந்தளுடனே தண்ணிய புதர் தோறும் மலர்ந்து அழகு செய்யப் பொற்காசினைத் தொங்க விட்டாற் போன்ற அழகையுடைய நல்ல மலரையுடைய சரக் கொடியின் ஒள்ளிய பூங்கொத்துகள் அதன் கிளைகள் தோறும் தொங்க இவற்றால் நறு நாற்றத்தைப் பரப்பினாற் போன்ற சிவந்த முல்லை நிலத்தில் நீர் அமையப்பெற்ற பெரியவழியின் நீண்ட இடமெங்கும் சுவடுபிளப்ப இயங்கும் தொழிலையுடைய நினது நெடிய தேர் விரைவிலே செல்லுவதாக!

புதல்-புதர்; இணர்-பூங்கொத்து; தூங்க-தொங்க; கருவிளை-கருங்காக்கணம்; தோன்றி-செங்காந்தள்; வம்பு-நறுமணம்; போழ-பிளப்ப; நகர்-மாளிகை; வந்தீக-வருக.]

* * *

தன் அருமைக் காதலியையும், அன்புக் குழந்தையையும் காணவேண்டுமென்று, சென்றிருக்கும் தலைவன் எவ்வளவு ஆவல் கொள்ளுகிறான் என்பதையும், அதற்காக எவ்வாறு விரைந்தோடி வருகிறான் என்பதையும் இச் செய்யுளாசிரியர் மிக நயம்பட எடுத்துரைத்துள்ளார்.

தாய் மகனை "என் அம்மாவே, வா!'' என்று கொஞ்சுவதாகக் கூறப்பட்டிருப்பது நினைந்து நினைந்து மகிழ்வதற்குரியதாகும்.

காதலி தன் மகிழ்ச்சியின் பெருக்கால் குழந்தையை எழுப்புகிறாள். அவ்விருவரும் தன்னைக் கண்டவுடனே பெருமகிழ்ச்சியுறுவார்கள் என்பதற்காகவும், அவர்கள் மகிழ்ச்சியுறுவதைக் கண்டு தான் மகிழ்ச்சியடையலாம் என்பதற்காகவும், தேரை விரைவாகச் செலுத்துமாறு தலைவன் பாக
னிடம் கூறுகிறான்.

கருங்காக்கணங் கொடிக்கு
நீல மணியையும், சரக்
கொன்றை பூத்துக் குலுங்கு
வதற்குப் பொற்காசினைத்
தொங்க விடுவதையும், அணி
கலங்களின் ஒளிக்கு மின்னலை
யும், குழந்தையின் கண்ணுக்
குப் பூவையும் உவமைகளாகக்
கூறப்பட்டிருக்கின்றன.

இல்லறத்தை நடத்தும் மனை
வியானவள் விருந்து எதிர்
கொள்வதிலே விருப்பங் காட்
டுவது, தாய் மகனைப் பார்த்து
"என் அம்மாவே. வா"
என்று அழைப்பது; போக்கு
வரத்துக்கும் போர்க்களம்
செல்லுவதற்கும் தேரினைக்
கருவியாகப் பயன் படுத்து
வது போன்ற பழக்க வழக்கங்
கள் உணர்த்தப் பட்டிருக்கின்
றன. O

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் கற்றுக்கொண்டால், உலகத் தொடர்புகொண்டுவிட முடியுமா என்றால், முடியாது. இந்த இரண்டு மாநிலங்களும் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால், இரண்டு மாநிலங்களும் அவசியத்தை ஒட்டி விரும்பிக்கற்றுக் கொள்ளப் போகின்ற—கற்றுக் கொண்டிருக்கிற ஆங்கிலத்திலேயே பேசிக்கொள்ளலாமே! இந்த மாநிலங்கள் ஒன்றோடொன்று பேசிக்கொள்வதற்காக என்று, தனியாக வேறு வகையில் பயன்தரா இந்தியைக் கற்றுக்கொள்ளவேண்டிய இன்றியமையாமை இல்லையே!

மேலும் ஆங்கிலத்தினுடைய நட்புறவைப் புதிதாகத் தேடிக் கொள்ளவேண்டிய தேவையில்லை; சரியாகவோ தவறாகவோ சென்ற நூற்றைம்பது ஆண்டுக் காலத்திற்கு மேலாக அதன் நட்புறவு இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களோடும் இருந்து வருகிறது. தமிழ்நாடு - ஆந்திரம் - கருநாடகம்-கேரளம்-வங்காளம்-மராட்டியம்போன்ற மாநிலங்கள் இனிமேல் தான் இந்தியோடு நட்புறவைப் புதிதாக ஏற்படுத்தித் தீரவேண்டும். பொது மொழியாக இருத்தற்குரிய எல்லாப் பண்புகளையும் குறைவறப் பெற்றிருக்கிற ஆங்கிலம் நம்மோடு தொடர்பு கொண்டிருக்கும்போது அதனை உதறித் தள்ளி விட்டு, பொது மொழியாக இருத்தற்குரிய பண்பு எதனையும் கொண்டிராத இந்தியோடு மற்ற மாநிலங்கள் புதிதாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கட்டாயம் என்ன இருக்கிறது? நறுமணம் வீசும் உருக்கின நெய் கையிலிருக்கும் போது, நாற்றம் பிடித்த வெண்ணெய்க்காகத் தேடியலைவானேன்?

மாநிலங்கள் மொழி வழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு அந்
தந்த மாநில ஆட்சி முழுவதும்
அந்தந்த மாநிலமொழியிலேயே
நடைபெறலாம். ஒரு மாநிலம்
பிற மாநிலத்தோடும், உலகின்
பிற பகுதிகளோடும் தொடர்பு
கொள்ள ஆங்கிலத்தையே
பயன் படுத்திக் கொள்ளலாம்.
மாநிலங்கள் மெல்லமெல்ல தத்
தம் மொழியில் மாநில ஆட்
சியை மாற்றியமைக்க முற்படு
கிற வரையில் ஆங்கிலம் எப்
பொழுதும்போல் இருந்து வர
லாம். மாநிலங்கள் தேவையான
அளவுக்குத் தத்தம் மொழிக
ளில் ஆட்சியையும், பாடப்
பயிற்சியையும் அமைத்துக்
கொண்டான பிறகு, மாநில
மொழிகளால் நிறைவேற்றித்
தர முடியாத பிற மாநிலத்
தொடர்பு, மத்திய ஆட்சித்
தொடர்பு, உலகத் தொடர்
ஆகியவற்றை அகில உலகப்
பொது மொழியும், நம்மோடு
நூற்றைம்பது ஆண்டுகள் பழ
கிய மொழியும், இன்றைய நிலை
யில் அத்துறைகளில் பயன்
பட்டு வரும் மொழியுமான
ஆங்கிலத்தைக் கொண்டே
நிறைவேற்றிக் கொள்ளலாம்.
இந்தி மொழியின் தேவை என்
ளளவும் எங்கும், எப்பொ
தும், எதற்கும் தேவைப்
படாது.

திராவிடக் கூட்டாச்சியைப்
பொறுத்த வரையில் தமிழ்
தெலுங்கு - கன்னடம் - மலைய
ளம் ஆகிய நான்கு மொழி
களுமே அரசியல் மொழிகளா
இருக்கலாம்; வெளியுலகத்
தொடர்புக்கு ஆங்கிலம் போத
மானது; அதுவே பொது
மொழியாகவும் நின்று நிலவ
லாம்.

எனவே இன்றைய நிலை
லும், எதிர் காலத்திலும் அகில
உலகப் பொது மொழியான
ஆங்கிலமே இந்தியத் துணைக்
கண்டத்தின் ஆட்சி நிலவுகிற
வரையில் ஆட்சி மொழியாக
வும், பொது மொழியாகவும்
திகழும் தகுதி புடைத்ததாகும்

—இர. நெ

# விஞ்ஞான விந்தைகள்

"அன்பு"

"என்ன டாக்டர்? என் மகன் கால் கூடி வருமா...அல்லது..."

"நான் என்ன சார் செய்வது? அடி பலமாகப் பட்டு கால் எலும்பு முறிந்திருக்கிறது! பெரும்பாலும் இது சரியாவது கடினம் தான்!"

★

"டாக்டர்! தீ விபத்தில் சிக்கியதால் என் முகம் பூராவும் நெருப்பில் வெந்து விட்டது! அதனால் தான் என் முகம் இப்படி விகாரமாகப் போய் விட்டது! இதை நீக்குவதற்கு என்ன டாக்டர் செய்யலாம்? இந்த முகத்தோடு வெளியே செல்வதற்கே வெட்கமாயிருக்கிறது!"

"இதற்கு என்னம்மா செய்வது? தோலில் பெரிய புண் ஏற்பட்டு மறைந்த வடுக்களையே மருந்தினால் நீக்க முடியாது! அதிலும் இது தீப்பட்ட புண்ணிலிருந்து ஏற்பட்ட வடு! இதை மாற்ற முடியாதம்மா!

★

இப்படி மனித உடலில் ஏற்படும் சில வியாதிகளுக்கு மருந்தே கிடையாது. ஒரு தடவை காலிலோ கையிலோ பலமாக எலும்பு முறிந்து விட்டால் அவ்வளவு தான்! வாழ்வு பூராவும் முடமாகவே இருக்க வேண்டியது தான்!

ஆனால், நாளுக்கு நாள் எதையாவது கண்டு பிடித்துக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் இதற்கும் தக்க வழிகள் கண்டு பிடித்திருக்கிறார்களென்றால், அது கேட்போருக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும்! இதுவரையில் எலும்பு முறிவுக்கு டாக்டர்கள் செய்து வந்த சிகிச்சை நூற்றுக்கு நூறு வெற்றியளித்தது என்று கூற முடியாது!

உடலில் போதிய அளவு இரத்தமில்லாதவர்களுக்கு இரத்த பாங்கிலிருந்து இரத்தம் எடுத்து அவர்கள் உடலில் செலுத்தி அவர்களைப் பலமுள்ளவர்களாக்குகிறார்கள்.

அதுபோல் எலும்புகள் சேகரிப்பதற்கென்று ஒரு பாங்கு உள்ளது! அங்கு இறந்தவர்களின் நல்ல எலும்புகளை சேகரித்து விஞ்ஞான முறையில் பத்திரப் படுத்தி வைப்பார்கள்! ஆபத்தில் சிக்கியதால் எலும்பு முறிந்தவர்களுக்கு, முறிந்த எலும்பை முழுதும் நீக்கி விட்டு, முன்பே சேகரித்து வைத்த எலும்புகளுள் சரியானவற்றை எடுத்து அந்த இடத்தில் பொருத்தி விடுவார்கள்! பல நாட்கள் கழித்து அவைகள் உடலோடு நன்றாக பொருந்திக்கொண்டு முன்பிருந்த எலும்பைப்போலவே ஆகிவிடும்! இம்மாதிரி முறிந்த எலும்புகளுக்குப் பதிலாக முற்றிலும் "புதிய" எலும்பை வைத்து சரி செய்வதில் 93 சதவிகிதம் வெற்றியாகிறதாம்!

பலருக்கு வாழ்க்கையின் நடுவில் கண்கள் குருடாகி விடுவதையோ அல்லது சில ஆபத்துக்களின் மூலம் கண்பார்வை கெட்டு விடுவதையோ பார்க்கிறோம். இம்மாதிரி "பழுதான" கண்களுக்குப் பதிலாக வேறு "புதிய கண்களை" பொருத்தி விடலாம்! அப்பொழுது அவர்கள் முன் போலவே பார்வை பெற்று விடுவார்கள்! இந்த "புதிய கண்கள்" இறந்தவர்களினின்றும் அல்லது உயிருள்ளவர்களினின்றுமெடுக்கப் படுகிறது. நல்ல கண்பார்வையோடு இறந்தவர்களின் உடலினின்று மட்டும் தான் கண்களையெடுப்பார்கள். அவ்வாறு எடுத்த கண்களை வேறொருவருக்குப் பயன் படுத்தப்படும் வரை விஞ்ஞான முறைப்படி வைத்திருப்பார்கள்.

சிலருக்கு இரத்தக் குழாய்கள் பழுது பட்டிருப்பதால் பல பெரிய வியாதிகளினால் பீடிக்கப் பட்டிருப்பார்கள். இம்மாதிரியிருப்பவர்களுக்கும் பழுது பட்ட குழாய்களை யெடுத்து விட்டு "புதிய" இரத்தக் குழாய்களைப் பொருந்தி விடுவார்கள்! இம்மாதிரி "புதிய" இரத்தக் குழாய்களை 45 வயதுக் குட்பட்டு இறந்தவர்களின் உடலினின்றும் எடுக்கப் படுகிறது. அவ்வாறு எடுக்கப் படுபவர் நோயில்லாதவராக இறந்திருக்க வேண்டும். பெரும்பாலும் சரியான இரத்தக் குழாய்கள் ஒரு சிலரது உடலினின்று மட்டும் தான் கிடைக்கிறதாம்! அதனால் தான் இம்மாதிரி முறைகள் பெரும் பாலும் வழக்கத்தில் இல்லை. இம்முறை இலண்டனில் செயிண்ட் மேரிஸ் ஹாஸ்பிடலில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த பரிசோதனையை முதன் முதல் நாய்களிடம் நடத்தி நல்ல வெற்றி கிடைத்த பிறகுதான், மனிதர்களுக்கு அம்முறையை நடை முறைக்கு கொண்டு வந்தார்கள். இம் முறையில் 85 சத விகிதம் வெற்றி கிடைத்திருக்கிறது.

இம்மாதிரியே பழுதான நரம்புகளுக்கும் பதிலாகப் "புதிய" நரம்பைப் பொருத்தி விடலாம்! இந்த "புதிய" நரம்புகளும் இறந்தவர்களின் உடலினின்று தான் (இறந்து நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள்) எடுக்கப் படுகிறது! ஆனால் இந்தப் பரிசோதனை இளம் பருவத்திலேயே இருக்கிறது. முழுவெற்றி திருப்தியடையும் வகையில் கிடைக்கவில்லை.

நமது உடலில் காது, மூக்கு முதலிய பாகங்கள் குருத்தெலும்புகளால் ஆகியவை. இவை போன்ற இடங்களில் ஏதாவது குறை ஏற்பட்டால், நமது உடலிலேயே அதிகமாக குருத்தெலும்புகள் இருக்கும் இடத்திலிருந்து எடுத்ததைப் பொருத்தி வைத்தார்கள் இது வரையில். ஆனால் இம் முறையில் ஒரு தீமையிருக்கிறது. ஒரு உறுப்பை சரி செய்வதற்காக இன்னுமொரு இடத்திலிருந்து எடுத்து பொறுத்துவதால், இதில் இரண்டு ரண சிகிச்சை (Operations) நடத்த வேண்டியிருக்கிறது! அதனால் துன்பம் மிகுதியாக ஏற்படுகிறது. ஆகையால், இறந்தவர்களின் உடலிலிருந்தோ ஆடு மாடுகளின் உடலிலிருந்தோ எடுக்கப்பட்ட குருத்தெலும்பைப் பொருத்தி விட்டால் துன்பம் பாதி குறைக்கப் படுகிறது! இம்மாதிரி ஈடுசெய்வதற்காக எடுக்கப் படும் குருத்தெலும்புகளை இரண்டு ஆண்டுகள் வரையில்தான் விஞ்ஞான முறையில் வைத்திருக்க முடியும்! அதற்கு மேல் அதை உபயோகிக்க முடியாது. இந்த முறையை முதன் முதலில் சர் ஹெரால்டுகில்லிஸ் (Sir Harold Gillies) என்ற இலண்டன் இரணசிகிச்சை நிபுணரால் தான் கண்டு பிடிக்கப்பட்டது.

சிலருக்கு உடலில் காயங்கள் மூலமோ அல்லது தீ விபத்தின் மூலமோ தோல் நிறம் மாறி விகாரமாயிருக்கும். இம்மாதிரி நிறம் மாறிய இடத்திலுள்ள தோலை எடுத்து விட்டு அதற்குப் பதில் "புதிய" தோலை வைத்துப் பொருத்தி விடலாம்! இந்தப் "புதிய" தோலும் இறந்தவர்களின் உடலினின்று தான் எடுக்கப் படுகிறது! இம்மாதிரி எடுத்த தோல்களை மிகமிகக் கீழான உஷ்ண நிலையில் பத்து வாரம் சில விஞ்ஞான முறைகளில் பத்திரப் படுத்தி வைத்திருக்க வேண்டும். எந்தத் தோலின் நிறம் பொருத்தப் படுபவரின் நிறத்துக்கு ஒத்ததாக இருக்கிறதோ அதை எடுத்து விஞ்ஞான முறையில் பொருத்தி விடலாம்! சில நாட்களில் அந்தப் "புதிய" தோலும் இரத்த ஓட்டத்தின் மூலம் உடலோடு நன்கு பொருந்தி வேறுபாடு தெரியாமல் ஆகிவிடும்! இம்முறை முதன் முதலில் அமெரிக்காவிலுள்ள மருந்து ஆராய்ச்சி நிலையத்தில் (Medical Research Centre. U. S. A.) கண்டு பிடிக்கப்பட்டது.

சிலருக்கு மூத்திரப் பையில் (Kidneys) சில கோளாறுகள் இருக்கலாம். அம்மாதிரி இருப்பவர்களுக்கு, பழுதானதை எடுத்து விட்டு, நல்ல நிலையில் இறந்தவர்களினின்றும் எடுத்த மூத்திரப் பையைப் பொருத்தும் முறையை இப்பொழுது பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள்! இம்முறையை நாய்களின் மீது நடத்தி நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது! மனிதனுக்கு இம்முறையை அனுஷ்டிக்க முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள் விஞ்ஞானிகள்!

அப்பப்ப! நினைப்பதற்கே ஆச்சரியமாக இருக்கிறது! இன்னும் என்னென்ன தான் கண்டுபிடிப்பார்களோ இந்தப் "பொல்லாத" விஞ்ஞானிகள்! நமக்கும் ஒரு இலாபம்! என்னவெனில் இனி யாராவது பெரியவர்கள் சிறுவர்களை குதிகால் நரம்பை எடுத்துவிடுவேன்," "தோலை உரித்துவிடுவென்," "எலும்பைமுறித்து எண்ணிக் கொடுத்துவிடுவேன்" என்று சொன்னால் முன்போல்பயப்பட வேண்டியதில்லை! அது அதற்கும் வேறொன்[illegible] முன்னிலும் நல்லவைகளாக[illegible]பார்த்துப் பொருத்தி[illegible]ளலாம்!! அந்தத் து[illegible]க்கு விஞ்ஞானிகள் கொண்டுவந்துவிட்டார்கள்!!!

நாம் இப்பொழுது கடைகளில் "இங்கு இயந்திரப் பாகங்கள் விற்கப்படும் (Engine Spare Parts Sold Here)" என்ற விளம்பரப் பலகைகளைப் பார்ப்பது போல நம்முடைய எதிர்கால சந்ததிகள் "இங்கு மனித உடலின் பாகங்கள் விற்கப்படும்" "(Spare parts for Human Bodies Sold Here") என்ற விளம்பரப் பலகைகளைக் கடைகளில் பார்த்தால் அது ஒன்றும் வியப்புக்குரிய நிகழ்ச்சியாயிருக்காது! அந்த எதிர்காலம் வெகு தூரத்திலில்லை! இதோ நெருங்கி வந்துகொண்டிருக்கிறது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதிக் கொடுத்து, அது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டால்தான், செவ்வாய் கிரகத்தில் நிலம் தர கம்பனி முன வருகிறது.

நிலம் விற்கிற பணத்தைச் சேர்த்து, அந்தக் கம்பனி "செவ்வாய் செல்வதற்கான ஆராய்ச்சிகளை" துரிதப்படுத்தும். முதலில் செல்கிற "செவ்வாய்விமானத்தில்" சிலரை அந்தக் கம்பனி அனுப்பி, அங்குள்ள நிலங்களைக் கண்டறிந்து, திரும்பிவரச் செய்து, அதைப்பற்றிய விவரங்களை கம்பனி மூலமாக வெளியிடச் செய்வார்கள். ஒரு சில சர்வே செய்யப்பட்டு, இப்பொழுது நிலம் வாங்குகிறவர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்படுமாம்.

ஜப்பானிலுள்ள "செய்வாய் நில விற்பனை கம்பனி" இதுவரை 2 லட்சம் சதுரமைல்களுக்குமேல் விற்று விட்டதாம். அதாவது நமது சென்னை மாநிலத்தைப்போல நான்கு பங்கு நிலம் விற்கப்பட்டுள்ளது!

# மேலான பார்வைக்கு

கனம் பொருந்திய இந்தியாவின் பண மந்திரி டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் அவர்களின் மேலான பார்வைக்கு; சர்க்கார் பஸ் கண்டக்டர் பக்கிரிசாமி எழுதிக்கொண்டது.

உங்களுடைய சோப்புக் கம்பனியில் ஆபிஸ் பையனுக வேலை பார்த்த பக்கிரிசாமி தான் இந்த லெட்டரை எழுதுகிறேன். அப்பொழுதெல்லாம் சோப்பு வியாபாரம் சக்கை போடு போட்டது. பிறகு சர்க்காரில் ஏதோ பெரிய வேலை கிடைத்தது என்று போய் விட்டதாகச் சொன்னுர்கள். நானும் சர்க்காரில் ஒரு வேலையில் சேர்ந்தேன், பஸ் கண்டக்டராக!

உங்கள் படமும், பேச்சும் பத்திரிக்கையில் பார்க்கும் பொழு[illegible]ப் பெருமையாக இருக்கும். ஆகா, நம்ம எசமா[illegible]வு பெரியவராக ஆகிவிட்டாரே என்று! இந்தி[illegible]க்கும் நீங்கள் தான் பண மந்திரி என்று கேள்விப்[illegible]பொழுது மிகவும் புளகாங்கித மடைந்தேன்! 'உங்கள் ஐயா டெல்லி சட்டசபையில் வெளுத்து வாங்குகிறுர்' என்று என்னுடனிருப்பவர்கள் சொல்வார்கள்! சோப் கம்பனி வைத்தவருக்கு வெளுத்து வாங்கத் தெரியாதா, என்ன?

சோப் போடத் தெரிந்த பழக்கமே இருந்தால் போதும். எவ்வளவோ வெள்ளையும் சள்ளையுமாக இருக்கலாம். அதிலும் பெரிய கம்பனியே வைத்த உங்களுக்கு இது சர்வசாதாரணம்!

அமெரிக்காவுக்குக் கடன் கேட்கப்போய் மிகவும் அலுப்புடன் திரும்பி வருகிறீர்கள்! கடன் கேட்பது எவ்வளவு கஷ்டமானது என்பது எனக்குத் தெரியும். மானம் வெட்கம் விட்டு, கெஞ்சிக் கூத்தாடி, பல்லைக் காட்டிப் பரதவித்து நின்றுல் தான், ஐந்தோ பத்தோ கடன் கிடைக்கும். ஆனுல் அதையெல்லாம் லட்சியம் செய்யாமல் நீங்கள் போவீர்கள் என்பது தெரியும். இருந்தாலும் ஐந்து பத்துக்கே இவ்வளவு கஷ்டமாயிருக்கிறதே, கோடிக்கணக்கில் பணம் வேண்டுமென்றுல், அம்மாடி! எவ்வளவு கஷ்டமாயிருக்கும்! நான் வழக்கமாக கடன் வாங்குவது என்றுல் எங்கள் தெருக் கோடியில் இருக்கிற குல்மால் சேட்டிடம் தான் போவது வழக்கம். ஏதாவது நகையோ நட்டோ, குடமோ குத்துவிளக்கோ, ஏதாவது அடகு வைத்தால் தான் கடன் கிடைக்கும்! நீங்கள் எதை அடகு வைத்துக்கடன் கேட்கப் போயிருந்தீர்கள்? பத்திரிக்கையில் வந்த படங்களில் வெறும் கையுடன் தான் காணப்படுகிறீர்கள்! அடகு வைக்கிறதென்றுல், நமது சேட்மார்கள் பலரே பணம் கொடுக்க முன் வருவார்களே!

என் சங்கடத்தைப் பற்றி எழுத நினைத்து, எங்கெங்கோ போய் விட்டேன். எந்த நேரத்தில் இந்த நயா பைசாவைக் கொண்டு வந்தீர்களோ தெரிய வில்லை, அதிலிருந்து பஸ் கண்டக்டர்களாக இருக்கும் எங்களுக்கு கஷ்டகாலம் தான்! நீங்கள் செய்வதற்கு நாங்கள் திட்டு வாங்க வேண்டியிருக்கிறது! நமக்கு இரண்டணு போனுலும் போகிறதென்று அதைச் சமாளித்துக் கொண்டு வீட்டுக்குப் போனுல், அங்கு கணக்கு வழக்கு கேட்டு பெண்டாட்டியிடம் வேறு திட்டு வாங்கவேண்டியிருக்கிறது! சே! சே! இந்த நயா பைசா வந்ததும் போதும், எங்கள் பிழைப்பு நாய்ப்பிழைப்பாகி விட்டது!

இரண்டு வாரத்துக்கு முன் 13 நயா பைசா டிக்கட்டுக்கு ஒரு இரண்டணு (சதுரப்பட்டை) நாணயத்தைக் கொடுத்தார். "இன்னும் ஒரு நயா பைசா வேண்டும்" என்றேன் "ஏன்?" என்றுர்.

"இரண்டணுவுக்கு 12 நயா பைசாதான்!"

"என்னிடம் நயா பைசா இல்லை. இதோ இன்னொரு இரண்டணு!" என்று மற்றொரு சதுர இரண்டணுவை என் கையில் வைத்தார். "மொத்தம் எவ்வளவு?"

"நாலணு!" என்றேன்.

"நாலணுவுக்கு எவ்வளவு நயா பைசா?"

"25 நயா பைசா!"

"உனக்கு எவ்வளவு தரவேண்டும்?"

"13 நயா பைசா!"

"பாக்கி எவவளவு இருக்கும்?" என்று கேட்டார்.

"12 நயா பைசா!" என்றேன்.

"12 நயா பைசா என்பது இரண்டணு! இதோ ஒரு இரண்டணுவை நான் எடுத்துக் கொள்கிறேன்!" என்று எடுத்துக் கொண்டார். முதலில் கொடுத்த இரண்டணு தான் மிஞ்சியது. எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. ஏதோ மாய மந்திர வேலை மாதிரி இருந்தது. உங்களுக்கே கூட இது பெரிய தலைவலியாக இருக்குமென நினைக்கிறேன்.

இதற்கப்புறம், ஒவ்வொரு இரண்டணுவுக்கும் 12 நயா பைசாதான் என்று கணக்கு வைத்துக் கொள்ளும்படி சொன்னுர்கள். சென்றவாரத்தில் ஒருவர் ஒரு ரூபாய் கொடுத்து, 10 நயா பைசா, 15 நயா பைசா இரண்டு டிக்கட் வாங்கினுர். 25 நயா பைசா. அதாவது 4-அணு போக, பாக்கி 12 அணுவுக்கு நான் 6 இரண்டணுக்கள் தந்தேன். அதுதான் என்னிடமிருந்து. அவர் "6 இரண்டணு மொத்தம் 72 காசுதான். பாக்கி 3 காசு தா!" என்று கேட்டு வாங்கிக்கொண்டு போய்விட்டார். இப்படி ஒவ்வொருவருக்கும் 3 காசு கொடுத்துக் கொண்டிருந்தால், பஸ் கண்டக்டர் வேலை பார்க்க நான் ஊரிலிருந்து பணம் கொண்டுவர வேண்டியது தான்!

நேற்றைய தினம், 10 நயா பைசா டிக்கட்டுக்கு ஒருவர் 5 காலணு நாணயங்களை வைத்தார். "என்ன ஐயா!" என்றுல், "ஒரு காலணுவுக்கு 2 காசு; 5 காலணுவுக்கு 10 காசு!" என்று சொல்கிறுர்! என்ன செய்யலாம், கடன் வாங்க நீங்கள் அமெரிக்கா, ஐரோப்பா என்று ஓடுவதைப் போல, நான் எங்கேயாவது ஓடவேண்டியது தான் போலிருக்கிறது!

என் சங்கட நிலைமையை உங்கள் ஒருவரால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்று எழுதுகிறேன். நான் போடுகிற கணக்கால் என் வீட்டுக்கு நஷ்டம் வருகிறது, நீங்கள் போடுகிற கணக்கால், இந்த நாட்டுக்கு நஷ்டம் வருகிறது! சாமி! நமக்கு இந்த வேலை யெல்லாம் ஒத்து வராது? பழையபடி சோப்புக் கம்பனிக்கே போய் விடுவது தான் நல்லது! அங்கு இருந்தால், நம்ம இஷ்டம், எதையும் வெளுத்து வாங்கலாம்!

நயா பைசாவினுல்
நாய் படும் பாடு படுகிற
பஸ் கண்டக்டர் பக்கிரிசாமி.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் இத்தகைய "எதிர்பார்க்கும்" தன்மை உற்சாகத்தைக் கொடுக்கலாம். ஆனுல் எந்த அடிப்படைமீது எஸ். கே. டே போன்றவர்கள் ஆருடங்களைக் கணிக்கிறுர்கள் என்பது தெரியவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், உணவு உற்பத்தி கடைசியாகக் குறைந்து வந்திருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 25 லட்சம் டன், அதிகமாகும் என எதிர்ப்பார்த்ததற்கு 14 லட்சம் டன் அளவு தான் கூடியுள்ளது!

இவ்வாறு இருக்கும் பொழுது திடீரென 1960க்குள் 3 கோடி டன் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் என்றுல், எந்த நம்பிக்கையை வைத்து அப்படிச் சொல்கிறுர்கள் என்பதே புரியவில்லை. பிறரை ஏமாற்றச் சொல்கிறுர்களா? அல்லது தங்களைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறுர்களா? எந்த அளவு முடியும் எந்த அளவு கிடைக்கும் என்பதை நியாயமான முறையில் போட்டுப்பார்த்தால் நல்லதே ஒழிய, தாறுமாருக மனம்போன போக்கில் 25சதவீதம் உயரும், 50 சதவீதம் உயரும் என வானத்தைப் பார்த்துக் கொண்டு திட்டங்கள் போடுவது, இரவில் கூடிய ஆண்டிகள் மடம் கட்டுவதைப் பற்றி பெரிய திட்டங்கள் போட்டு விட்டு, காலையில் எழுந்ததும் பழையபடி பிச்சைப் பாத்திரத்துடன் பண்டாரங்கள் வெளிக்கிளம்புவதைப் போலிருக்கிறது!

உண்மையில் நமது நிதிமந்திரியும் மற்றவர்களும் பிச்சைப் பாத்திரத்துடன் வெளிநாடுகளில் சுற்றிக்கொண்டிருக்கிறுர்கள், இங்கிருப்பவர்கள் ஏதோ குபேர நாட்டிலிருப்பதாக நினைத்துத் திட்டங்களைப் போடுகிறுர்கள்! அவ்வாறு கனவு கண்டு தாறுமாருன செலவுகளைச் செய்வதால் ஏழைமக்களின் தலையில் கல்லைப்போடுவதுபோல வரிகளைப் போட்டுக்கடைசியாக ஈடுசெய்ய வேண்டி வருகிறது!

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண்: